உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 36 | நள - தை - 10—2—77 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

சிவராத்திரி விரதச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

வானமிது வெல்லாம் உடையான் தன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
கடைக்கண்ணால் மங்கையையும் நோக்கா என்மேல்
ஊனமது எல்லாம் ஒழித்தான் தன்னை
உணர்வாகி அடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. — அப்பர்.

திருச்சிற்றம்பலம்

விரதம் ஏன் ?

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய பண்டைப் புலவர்கூட 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்று எடுத்துக் கூறத் தயங்கியதில்லை. ஆதலின் நமக்கு வரும் நன்மைக்கும்

தீமைக்கும் நாம்தாம் காரணம் என்ற எண்ணம் நம்மிடையே வளர்ந்துவந்தால் ஒழிய, யாதும் ஊராக யாவரும் கேளிராகக் கொண்டு வாழ்தல் இயலாது. இதற்கு இன்றியமையாத்தேவை சமயத் தொடர்பும் அதுபற்றிய சிந்தனைகளுமே! எல்லாச் சமயங்களும் பல்வேறு அங்கங்களாகத் திகழ்ந்தாலும் அவற்றின் மகுடமாக விளங்குவது நம் சைவ சமயமே! சிவத்தைக்கொண்டு வாழ்பவர் எவரோ அவரே சைவர். சிவம் என்றால் அன்பு ஆதலின் அன்புகொண்டுபெறும் ஒன்றை வேறு எந்த ஆயுதம் கொண்டும் பெற இயலாது.

அச்சிவ வழிபாட்டிற்குப் பல்வேறு நெறிகள் உண்டென்றா லும் அவற்றுள் விரதநெறி போற்றற்குரியது. விரதம் என்றால் மனம் பொறிவழி போகாது நிற்றல்பொருட்டு உண்டி சுருக்கல், உறங்காதிருத்தல், வழிபாட்டுச் சிந்தனையுடன் இருத்தல் இவை இன்றியமையாதன என்பர். இவ்விரதங்களுள்ளும் சிவவிரதம் தலைசிறந்தது. அவற்றிலும் தலைசிறந்தது சிவராத்திரி விரதமாகும். ஏனெனில்,

" மணிநிதியாவும் பூக்கும் மாசிலாத் தெருளுண்டாக்கும்
அணிசிவ கருமந்தேக்கும் அட்ட ஐசுவரியம்காக்கும்
பணிபுனை சுந்தரேசர் பயிலுநோன் பெவைக்கு மேலாம்
திணிதிருத் தவத்தின் முன்னும் சிவநிசி யென்னுமாதோ "

என்பதனால் உணரலாம்.

சிவலிங்கத் தோற்றம் :

நான்முகனும் திருமாலும் ஒருவருக்கொருவர் மேலானவர் என்று பூசலிட்டஞான்று சிவபெருமான், அவர்களுக்கு அருள் பாலிப்பதற்காக இலிங்கத்திருமேனி உருவில் ஜோதிப்பிழம்பாக நின்றார். இத்திருமேனியை அவர்கொண்டகாலமே சிவராத்திரி. இவ்வரலாற்றை இலிங்க புராணத்துள் விரிவாகக் காணலாம்.

" அரியும் யானும்முன் தேடுமவ் வனற்கரி யனல
கிரியெ னும்படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவராத்திரி யாயின திறைவற்
பரவி யுய்ந்தனர் அன்னதோர் வைகலிற் பலரும் "

என்று சரபோபநிடதமும் இதனைப் பாராட்டியுள்ளது.

சிவராத்திரி வகைகள் :

சிவராத்திரியைச் சமய உலகு ஐந்து வகையாகப் பிரித்துள்ளது. 1. நித்திய சிவராத்திரி. 2. பட்ச சிவராத்திரி. 3. மாத சிவராத்திரி. 4. யோக சிவராத்திரி. 5. மகா சிவராத்திரி.

1. நித்திய சிவராத்திரி :— ஓர் ஆண்டிலுள்ள இருபத்து நான்கு சதுர்த்தசிகளிலும் சிவபூசைசெய்து வழிபடுவது ஆகும்.

2. பட்ச சிவராத்திரி:— தைத்திங்கள்கிருஷ்ணபட்சப்பிரதமை முதல் பதின்மூன்று நாட்கள் சிவபூசை செய்வது ஆகும்.

3. மாத சிவராத்திரி :— தேய்பிறைச் சதுர்த்தசி நாட்கள் பன்னிரண்டும் மாத சிவராத்திரியாகும்.

4. யோக சிவராத்திரி :— சோமவாரம் சூரிய உதயம்முதல் 10 நாழிகை வரை சதுர்த்தசி இருக்குமாயின், அது யோக சிவராத்திரியாகும்.

5. மகா சிவராத்திரி :— மாசித்திங்கள் கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவில் சிவபெருமான் சிவலிங்கத் திருவுருவில் தோன்றினர்; அன்று மகா சிவராத்திரி ஆகும்.

சிவராத்திரி விரத முறையும் பயனும் :

இந்த மகா சிவராத்திரி அன்று இரவில் பதினைந்து நாழிகைக்குமேல் இரண்டு நாழிகை உள்ள காலமே சிவபெருமான் இலிங்கத் திருமேனி கொண்ட காலம் (12 மணி முதல் 1 மணி வரை) என்று சொல்லப்படுகிறது. இந்தநாளில் இரவு நான்கு சாமங்களிலும் தன்பொருட்டும் பொதுநலம் கருதியும் சிறப்பாகப் பூசைகள் செய்து வழிபடுவது சைவர்கள் கடமை ஆகும். உறங்காமை, உண்ணாமை, சிவ வழிபாடு, சிவாலய தரிசனம் என்பன சிவராத்திரியில் இன்றியமையாது மேற்கொள்ளத்தக்கனவாகும். உறங்காமைஎவ்வளவுமுக்கியமோ அதைவிட முக்கியம் எங்ஙனம் இருக்கின்றோம் என்பது ஆகும். ஆதலின் சிவசிந்தனையுடன் இருப்பதே உரியதும் போற்றத் தக்கதுமாகும்.

சிவராத்திரி பூசை செய்து பயன் பெற்றோர் வரலாறுகள் பலவற்றைக் கந்தபுராணமும், இலிங்கபுராணமும் விளக்குகின்றன.

ஊனுண்டு வாழும் வேடன் ஒருவன் மாசிமாதக் கிருஷ்ண சதுர்த்தசியன்று வேட்டையாடக் காட்டிற்குச்சென்றான். பகல்முழுதும் அலைந்து திரிந்தான். வேட்டையாட ஒன்றும் கிடைக்கவில்லை. இரவுவந்தது. ஒரு குளக்கரை; அங்கு ஒரு வில்வமரம் இருந்தது. அதன்கீழ் ஒரு சிவலிங்க உருவம் இருந்தது. இரவில் புலி வரக்கூடும் என்ற அச்சத்துடன் வில்வமரத்தில் ஏறிக்கொண்டு இரவெல்லாம் உறக்கம் வராதிருக்க வில்வ இதழ்களை ஒன்றொன்றாகப் பறித்துக் கீழே போட்டவண்ணம் இருந்தான். அன்று அவனுக்குச் சிவராத்திரி விரதத்தின் பயன்

கைகூடியது. உண்ணாமை, உறங்காமை, சிவவழிபாடு முதலியன தற்செயலாக அமைந்தன. பின் சிவபெருமானே அவனுக்குச் சிவராத்திரி விரதச் சிறப்பை உபதேசித்தார்; அவன் இறுதிக் காலத்தில் எமபயம் இன்றி உய்ந்தான். இதனைக் கந்தபுராணம் கூறுகின்றது. தற்செயலாகச் செய்த பூஜைக்கே இங்ஙனம் பயன் விளையுமானால் அறிந்து செய்வோர்க்குச் சொல்லவும் வேண்டுமோ ?

சிவதீட்சைத் திருநாள் :

இப்புனிதமான சிவராத்திரித் திருநாளில் சைவ அன்பர்கள் சைவாதீன குருமகாசந்நிதானங்கள், சிவாசாரியப் பெருமக்கள் மற்றும் தீட்சை செய்வித்தற்குரிய ஆசாரியப் பெருமக்களிடம் சிவதீட்சை பெற்று, நியமமாக அனுட்டானங்கள் மேற்கொள்ளுதலும் சிவபூஜை எழுந்தருளப்பண்ணிக்கொள்ளுதலும் பெரிதும் பயன் கொடுக்கும் நெறியாகும்.

இவ்வாண்டு சிவராத்திரித் திருநாள், மாசித்திங்கள் 5 ஆம் நாள் (16—2—77) புதன்கிழமை அன்று அமைகிறது. சைவப் பெருமக்கள் அனைவரும் உளத்தூய்மையோடு பூஜைகள்செய்தும் சிவாலய தரிசனம் செய்தும் இறை அருளை நிரம்பப்பெற்று உய்வார்களாக !

அட்டைப்பட விளக்கம்

இறைவன் சோதிவடிவாய்த் தோன்றி காட்சியளித்த காலம் சிவராத்திரியாகும். அதனால் சோதிலிங்கத் தலங்களில் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சோமநாதம், ஸ்ரீசைலம், உஜ்ஜைனி, ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேசுவரம், நாகேசம், வாரணாசி (காசி), திரியம்பகம், கேதாரம், குஸ்மேசம், என்பன பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களாகும். இப்பன்னிரண்டு தலங்களிலும், தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் தரிசனம் செய்துள்ளார்கள். இவற்றுள் சோமன் (சந்திரன்) வழிபட்டு தக்கனது சாபம் நீங்கிய தலம் சோமநாதம். இது குஜராத் மாநிலத்தில் உள்ளது. இவ்வாண்டு சிவராத்திரி (16 – 2 – 77) நாளை முன்னிட்டு சோமநாதர் திருக்கோயில் தோற்றம் இவ் விதழ் அட்டையை அழகு செய்கிறது.

உ

குருபாதம்

திருவாரூர்

அருள்மிகு. அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

ஆசியுரை

24—4—1976

உறுதிகொள்ளும் திருநாள் :

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்குமுன் இந்தத் திருவாரூர்த் திருமண்ணில் திருவவதாரம் செய்த திருநாவுக்கரசு நாயனாரின் குருபூஜை விழாவை இங்கே சிறப்பாகக் கொண்டாடுகின்றோம். எந்த விழாவாக இருந்தாலும், அவ்விழாவின் தத்துவத்தையும், உண்மையான குறிக்கோளையும் உணர்ந்து கொண்டாடுவதே சிறப்புடையதாகும். குருபூஜை என்றால் என்ன? குருநாதராக விளங்கியவர்களை அவர்கள் திருவருட்பேறு எய்திய திருநாளில் பூசிப்பது என்று கருதுகின்றோம். பூவும் நீரும் கொண்டு அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபடுவது மட்டுமே குருபூஜை ஆகி விடாது. அப்பர்பெருமானைப் போன்ற, ஆசாரியர்களாக விளங்கும் அருளாளர்கள், நமக்காக - நாட்டுக்காக - நாட்டு மக்களுக்காகப் பலகாலும் திருவருள் வலத்தால் உபதேசித்த அறவுரைகளைச் சிந்தித்து, உணர்ந்து, செயற்பட உறுதி எடுத்துக் கொள்வதே உண்மையான குருபூஜையாகும். நம்மில் பலர், அப்பர் பெருமானைப்போன்ற ஆசாரியர்களுக்குச் சிறப்புச்செய்வதற்காகவே கொண்டாடப்படுவதாகக் கருதுகின்றனர். உண்மை அதுவல்ல! அருளாளர்களது பெருமைகள் எல்லாம் அவர்களது உபதேசங்களால் விளங்கித் தோன்றும். உண்மையில், இத்தகு விழாக்களை, அப்பர் பெருமானைப்போன்ற ஆசாரியர்களை நாம் நினைவுகூர்ந்து, அவர்கள் வழங்கிய அறநெறிகளைச் சிந்தித்து,

நடைமுறையில் எந்த அளவு கடைப்பிடிக்க இயலுமோ அந்த அளவு கடைப்பிடித்து உயர்வடைய உறுதி எடுத்துக்கொள்ளும் திருநாட்களாகவே கருதவேண்டும்.

தற்சோதனைக்கே விழா :

ஆண்டுதோறும் இத்தகு குருபூஜை விழாக்களைக் கொண்டாடுவது ஏன் எனச் சிலர் நினைக்கக்கூடும். கடந்த ஆண்டுக் குருபூஜையின்போது, நாம் கடைப்பிடிப்பதாக உறுதி எடுத்துக் கொண்ட அறவுரைகளை நினைவுகூர்ந்து, எந்த அளவு அவற்றை மேற்கொண்டு வளர்ந்திருக்கின்றோம் எனத் தற்சோதனைசெய்து கொள்ளவும், நடைமுறைச் சாத்தியமாக, இயலாத கோட்பாடுகளை எங்ஙனம், மாற்றி மேற்கொள்ளக்கூடுமெனச் சிந்திக்கவுமே ஆண்டுதோறும் நாம் கொண்டாடும் குருபூஜை விழாக்கள் வாய்ப்பாக அமைகின்றன. சமுதாயச் சிக்கல்களுக்கும், உயிரின் ஈடேற்றத்திற்கும் திருவருள் வலத்தால் நல்வழி கண்டு காட்டும் இத்தகு அருளாளர்களின் நெறிமுறைகள், கற்றுத் தேர்ந்தவர்களுக்கு மட்டுமின்றி, சாதாரண மனிதர்களுக்கும் வழிகாட்டியருளுகின்றகாரணத்தால்தான் இங்கே பலநிலையினரும் ஒருங்கே கூடியுள்ளார்கள். இத்தகு சிந்தனைகளோடு, இப்புனிதத் திருநாளில் அப்பர் பெருமான் நமது ஈடேற்றத்திற்காக வழங்கியருளிய அறநெறிக் கோட்பாடுகளை, அவர்தம் வாழ்வியல் உறுதிப்பாடுகளோடு இங்கே சிந்திப்போம்.

தக்கதோர் தலைவனைத் தேர்க :

ஒவ்வொருவரும் உலகியல் வாழ்வில் ஈடேற்றத் தக்க தலைவர் ஒருவரை வழிகாட்டியாகப் பற்றிக்கொள்ளவேண்டும். தமது நலத்தில், அக்கறையுடைய அத்தகையோரைப் புற உலகக் கவர்ச்சியால், இகழ்ந்து கைவிடுவாராயின் சொல்லொணுத் துயரங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இவ்வுலகியல் உண்மை அப்பர்பெருமான் வாழ்வியலால் நன்கு விளங்குகின்றது. தம் தாய்தந்தையர் மறைந்தபிறகு, தமக்கையாரையே தமக்குத் தலைவராகப் பற்றிநின்றூர் நாவரசர். தமக்கு மணளராகவர இருந்த கலிப்பகையார் மறைவுகேட்டு உயிர்துறக்கத் துணிந்த திலகவதியாரைப் பற்றிக்கொண்டு, 'தாய் தந்தையர் மறைந்த பிறகும், உம்மை வழிபட்டு வாழ்வதால் வாழ்ந்திருந்தேன்; நீவிர் உயிர் துறப்பதாயின், நான் முன்னரே உயிர் நீப்பேன்' எனக் கூறும் அளவுக்குத் தமக்கையாரையே வழிகாட்டியாகக்கொண்டு இளமையில் விளங்கினர். அப்படிப்பட்ட

நாவரசர், 'தம்பியார் உளராகவேண்டுமென வைத்த தயா'வால் உயிர் வாழ்ந்திருந்த தமக்கையாராகிய திலகவதியாரை, பகுத்தறிவுக் கவர்ச்சி காரணமாகப் புறக்கணித்து, நெறியல்லா நெறி சென்று சார்ந்தார். உண்மை வழிகாட்டியாக விளங்கிய தமக்கையாரின் அறநெறிக் கோட்பாடுகள் அவருக்குக் கவர்ச்சியாக இல்லை. உலகியல் கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் கவர்ச்சியாக இருந்த நெறியால் அவர் ஈர்க்கப்பட்டு நம்பர் அருளாமையினால் உண்மை வழிகாட்டியைப் புறக்கணித்தார்.

தவறினால் வரும் தண்டனை :

போலியான கவர்ச்சிகள் நெடுநாள் நிலைப்பதில்லை. அப்பர் பெருமானைக் கவர்ந்த புறநெறி துன்பக் காலத்தில் கைவிட்டு விட்டது. போலிக் கவர்ச்சியால் ஏற்பட்ட மாயை நீங்கிய பிறகு தான், உண்மையான தலைவர் யார் என உணரும் நிலை ஏற்பட்டது. சைவம் மீண்டு, தமக்கையாராகிய திலகவதியாரையே வழிகாட்டியாக ஏற்றார். தமக்கையாராகிய திலகவதியார் வழிகாட்டியாக மட்டுமின்றி 'திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்து ஓதிக் கொடுத்து' சமணநெறி நின்றாரைச் சைவராக்கிக் குருவாகவும் விளங்கினார். இதனை அப்பர்பெருமானே அகச்சான்றாக,

> "எம்மை யாரிலை யானுமு ளேனலேன்
> எம்மை யாரு மிதுசெய வல்லரே
> அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்(கு)
> அம்மை யாரைத்தந் தாரா ரையரே"

எனத் திருவாரூர்த் திருக்குறுந்தொகையுள் குறிப்பித்தருளினார். நெறியல்லா நெறிபுகுந்து மீண்ட நாவரசரை, நெறியல்லாநெறி நின்ற சமணர்கள் தண்டிக்க, அத்தண்டனைகள் பலவற்றையும் இறையருளால் மாற்றி, இறுதியாகத் திருப்பாதிரிப்புலியூர் அருகே கரையேறியகாலையும் இதனை நினைவு கூர்கிறார் அப்பர்பெருமான்.

> "ஈன்றாளு மாய்எனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
> மூன்றாய் உலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
> ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
> தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே"

திருப்பாதிரிப்புலியூர் அரன், தாய் தந்தையராகமட்டுமின்றி, உடன் தோன்றிய திலகவதியார் உருவிலும் நின்று வழிகாட்டியருளிய கருணையினை இப்பாடல் நினைவு கூர்கிறது. இங்ஙனம், தக்க ஒரு தலைவரைப்பற்றி, அவர் சொல்வழி ஒழுகத் தவறினால்

பிற நெறியாளர் நம்மை ஈர்த்து நம் வாழ்வைச் சூனியமாக்கி விடுவார்கள். இவ்வாறான பாதுகாவலை இகழ்ந்த நிலையில் தாம் அடைந்த துன்பத்தினை,

" காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரை நின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன் "

என்று அரியதோர் உருவக அமைப்பில் அப்பர்பெருமான் குறித்தருளினர் இங்ஙனமாகத் தக்கதோர் தலைவரைப்பற்றிக்கொண்டு பக்தி செலுத்தி அவரை வழிபட்டு வணங்கும்போதே வாழ்க்கை வளம் பெறுகிறது. இவ்வாறான பக்தி கூட முன்னை நல்வினைப் பயனால் வருவதேயாகும். இவ்வாறான வாழ்வியல் நெறிநின்ற அப்பர்பெருமான் வாழ்வியல் படிப்பினைகள் சிலவற்றைக் காண்போம்.

பயன்மிக்க பாதயாத்திரை :

இவ்விருபதாம் நூற்றாண்டில், மக்கள் இயக்கத்தை ஒருங்கிணைத்துக் கத்தியின்றி. ரத்தமின்றி அஹிம்சைப்போராட்டத்தை நிகழ்த்திய காந்தியடிகளும், பூதானப் பேரியக்கத்தைத் தோற்றிய வினோபாபாவேயும் மக்களோடு மக்களாகக் கலந்துநின்று வெற்றிபெற்றவர்கள். பல்வேறு பகுதிகளிலும் பாதயாத்திரை மேற்கொண்டு, மக்கள் தம்மைத் தொடர்ந்துவரச்செய்த பெருமைக்குரிய இவர்களது இத்திட்டத்திற்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னரே அடியிட்டு வழிகாட்டியபெருமை அப்பரடிகளுக்கே உரியது. இறைவனின் திருவருளைப் பூரணமாகப்பெற்றிருந்தும் தமிழ் மண்ணில் கால் தோய திருத்தலங்களெல்லாம் பாத யாத்திரை மேற்கொண்டு, பல்லாயிரம்சிரடியார்களை ஒருங்கிணைத்துச் சைவ நெறி புதுக்கிய அப்பர் பெருமானின் இப்புனிதச்செயல் இன்றுவரை மக்களை ஈர்க்கும் அரிய நெறியாக விளங்கிவரக் காண்கின்றோம். இன்றும், சமுதாயத் தலைவர்களும், அரசியல் நெறிநிற்போரும் இப்பாதயாத்திரையால் மிகுதியாகப் பயன் உண்டாவதை உணர்ந்து, தாமும் மேற்கொண்டு வருகின்றனர்.

சத்தியாக்கிரகத்தின் முன்னோடி :

காந்தியடிகள் அன்னியர்களுக்கு எதிராக ஏந்திய புனிய ஆயுதங்கள் சத்தியாக்கிரகமும், உண்ணா நோன்பு மேற்கொண்டதுமாகும். காந்தியடிகளுக்கு அப்பரடிகளின் சாத்விக

நெறிமுறைப் போராட்டங்கள் தெரிந்திருக்க இயலாது. 20 ஆம் நூற்றுண்டில் உலகமெலாம் வியந்த இச்சீரிய பண்புகளுக்கு முன்னேடியாகச் சமய வாழ்வில் உரிமைபெற அப்பரடிகள் மேற்கொண்டனவே சத்தியாக்கிரகமும் உண்ணு நோன்புமென் பதை உணர்ந்து தமிழர்கள் பெருமைப்படவேண்டும். சிவலிங்கத் திருமேனியை மண்ணிட்டு மூடி அமணர்கள் சமணப் பாழிகளை அமைத்திருக்கும் செய்தி அறிந்து பழையாறை வடதளியில், இவற்றை அகற்றி எம்பெருமானின் திருமேனியினைக் கண்டு தொழுத பின்னன்றி உண்ணேன் என அங்கேயே சத்தியாக் கிரகத்தைக் கடைப்பிடித்து உண்ணுநோன்பு மேற்கொண்ட உறுதிப்பாடு சமய வரலாற்றில் பெரிய திருப்பு முனையாக அமைந்து வெற்றியீட்டித் தந்தது. இவ்வாறு சமயத்தின் பெயரால் தோற்றுவிக்கப்பெற்று, சமுதாய விடுதலைக்கு உதவிய உண்ணு நோன்பு சிலரது தவருன நடைமுறைகளால், இன்று உரிய மதிப்பின்றிப் போயிற்று என்பதனையும் நினைத்துப் பார்த் தல் நமது கடமையாகிறது. எந்தப் போராட்டமும், அதன் பின்னணியில் உள்ள தூய நோக்கத்தைப் பொருத்தே வெற்றி பெறுகின்றது என்பதனை இதனுல் உணரலாம்.

முடியாட்சிக்கு எதிரான தனிமனிதப் போராட்டம் :

குடியாட்சி நிலவும் இக்காலத்தில் நியாயமான உரிமைகளுக் காக அரசினை எதிர்த்துப் போராடுதல் என்பது அரிதல்ல. ஆயின் முடியாட்சி நிலவி, எம்முடிபும் தனிமனித விருப்புவெறுப்புக் களுக்குத் தக எடுக்கப்பெற்ற அக்காலத்திலேயே, சமயத்தின் பேரால் ஒரு தனிமனிதர், அரசுக்கு எதிராக, நியாய உரிமை களைப் பெறப் போராடியிருப்பாரானுல் அச்செய்தி வரலாற்று முனையின் திருப்பமாகவே கருதப்படும். தனி மனிதனது சமய வழிபாட்டு முறைகளை, மன்னன் முறையின்றிக் கட்டுப்படுத்த உரிமையற்றவன் என்பதனை உணர்ந்து, சமணம் விட்டுச் சைவம் சார்ந்த தம்மை அழைத்துவரக் கூறிய பல்லவப் பெரு வேந்தனுக்கு எதிராக 'நாமார்க்கும் குடியல்லோம்' என் றெடுத்துப் பாடிய அப்பரடிகளின் அளப்பிலா வீரம் பெரு மிதத்திற்குரியதாகிறது. இந்திய வரலாற்றிலேயே முடியாட் சிக்கு எதிராகச் சமயத்தின் பேரால் நிகழ்த்தப் பெற்ற முதல் தனி மனிதப் போராட்டமாகவே இதனைக் கருத இடமுண்டு.

இறைவனுக்கே ஆட்படுவோம் :

தேசபக்தி, தெய்வ பக்தி என்ற இரண்டுமே மக்களுக்கு இருகண்கள்போன்றுஇன்றியமையாதன. இவற்றுள்ளும், தெய்வ

பக்தி வழிப்பட்ட தேசபக்தியே சிறந்தது என்பதனைக் காண முடிகிறது. அரசன் அழைத்தபோது "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்" என்றும், தம்மீது கொலை யானையை ஏவிய பொழுது 'அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவது மில்லை' என்றும் உறுதியோடு கூறிய அப்பரடிகள் வாக்கு இந்நூற்றாண்டில் வாழ்ந்த அமரகவி பாரதியாரால் பொன் போலப் போற்றிக் கொள்ளப்பெற்றது.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே" என விரித்துப் பாடினார்; தீமைக்கும் கொடுங்கோன்மைக்கும் எதிராக அஞ்சாமை பாடிய பாரதியார். அதனால் யார்க்கும் அடங்காத வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கூறவில்லை. 'ஒப்பற்ற பரம்பொருளுக்கு என்றும் அடிமைப்பட்டு வாழ்வோம். அதுவே தீமைகளுக்கு எதிரான போராட்டத்திற்கு, எமக்கு உத்வேகம் வழங்குகின்றது' என்ற பாரதியாரின் கருத்து நுட்பமுடையது.

"பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் – பரி
பூரண னுக்கே யடிமை செய்து வாழ்வோம்"

இவ்வெண்ணப்பாடு அப்பரடிகளின் வாழ்விலும் வாக்கிலும் விளங்கிக் கிடத்தலைக் காண்கின்றோம். இன்னொருவனுடைய ஆளுகைக்குஉட்படாத, சர்வசுதந்திரனாகிய எங்கள்பெருமானின் அடியவன் நான்: எனக்கு அச்சமென்பதே இல்லை: என்றும் அவன் திருவடிக்கே அடிமைப்பட்டு வாழ்வேன் என்ற அருள் நோக்கில் அப்பர்பெருமான் அருளிய.

"தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"

என்ற திருத்தாண்டக வரிகள், பாரதியாரின் பாடல்களுக்கு ஊற்றமாக அமைகின்றன. நன்னெறியில் செல்கின்றபோது எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை என்பதனையே இத்தகுசெயல்களும் அருள்மொழிகளும் விளக்குகின்றன.

சமயநெறித் தியாகிகள் :

இன்று அரசியல் வாழ்வில் பல்வேறு சார்புடையவர்களும், தம் கட்சிக்காகத் தியாகம் செய்தவர்களை நினைவு கூர்வதும்,

விழா எடுப்பதும், சிலை வடித்துச் சிறப்புச் செய்வதும் வழக்க மாக இருக்கின்றன. இத்தகு செயல்கள் தம்மைப் பின்பற்றும் தொண்டர்களுக்கு விளக்கமூட்டவே செய்யப் படுதலைக் காணு கின்றோம். சமய வாழ்வில் பல்வேறு தியாகங்களைச் செய்து, முன்னோடிகளாக நடந்து காட்டிய பெருமக்களே நமது நாயன்மார்கள். நாயன்மார்களின் அருள் வரலாறுகளை - அவர் களது ஒப்பற்ற தியாகங்களை நினைவு கூர்ந்து நம்மை, உயர்த்திக் கொள்வதற்காகவே அவர்களுக்கு விழாக் காணுகின்றோம். அப்பர் பெருமானையும் இவ்வுணர்வோடு நோக்க வேண்டும். உலகியல் வாழ்வில் மேன்மேலும் துன்பங்கள் தொடரும். அதனைப் பொருட்படுத்தாமல், சுடச் சுடரும் பொன் போல் துன்பத்தால் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். துன்பமே நம் அறிவு விளக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடிகோலும். இன்பம் அறிவை மழுங்கச் செய்து விடுவது. அடுத்தடுத்து வந்த துன்பங்களே நாவரசர் வாழ்வை ஒளி பெறச் செய்தன.

பிறர் நலமே சுயநலம் :

பிறர் நலம், நாட்டு நலம், உலக நலம் என்ற எண்ணம் விரிவடையும்போது தன்னலம் என்பது இதனுள் கலந்து விடுகிறது. ஒரு ஆசிரியன் முறையாகத் தம் மாணுக்கருக்குக் கற்பிக்கத் தொடங்கினால், அம்மாணவன் அறிவு நலம் பெறும் அதே நேரத்தில், இவனும் கற்பித்தலால் அறிவு விளக்கம் பெறுகின்றான். 'செவ்விதின் உரைப்ப அவ்விருகாலும் மையறு புலமை மாண்புடைத் தாகும்" என நன்னூல் இதனை விரித்துக் கூறுகிறது. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்' என்பது இந்நாட்டுப் பழமொழி. உலக நலத்திற்கும், நாட்டு நலத்திற்குமாகத் தம் வாழ்நாளை எல்லாம் அற்பணித்துக் கொண்ட காந்தியடிகள் எவ்வகையிலும் தாழ்ந்து போய்விடவில்லை. உள்ளத்தால் பொய் யாது ஒழுகிய அவர் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் நிறைந்து நின்றார். அதுபோல, சமுதாயத்திற்கும், சமயத்திற்கும், மொழிக் கும் வாழ்நாளை அற்பணித்துக்கொண்ட அப்பர் பெருமானின் புகழ்வாழ்வு பூரணம் பெற்று நிறைகிறது.

இறைவன் : இனியன் :

அப்பர் பெருமான் அருளியல் வாழ்வில் பெற்றபடிப்பினை களைக்கண்ட நாம், அவர் உபதேசங்களில் இரண்டை இன்று சிந்திப்போம். இதுவே இவ்விழாவின் பயனாக அமையட்டும். பிறந்தநாள் முதல், முதுமை எய்தி இறக்கும் காலம் வரை மனித மனத்தின் விருப்பங்கள் பலவாறாகப் பருவத்திற்குப்

பருவம் மாறுபடுகின்றன. குழந்தைப் பருவத்தில் இனிய கனிகளிலே விருப்பம். சற்று வளர்ந்த நிலையில் இனிப்புடைய கற்கண்டு போன்றவற்றின் சுவையில் விருப்பம், பருவ வயதிலோ பாவையர் தரும் காம இன்பத்தில் நாட்டம், அதுவும் கடந்த வளர்ச்சிப்பருவத்தில், நாடாளும் நிலைபெற்றுப் புகழ்ஈட்டுவதிலே ஈடுபாடு; இவற்றையெல்லாம் கடந்த நிலையில் இறுதியாகத்தான் இறையின்பம் இனிக்கின்றது. இதனை அப்பரடிகள்,

" கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவை நல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே "

என்ற பாடலில் கடவுள் இனியனாக விளங்குகிறான் என்பதை அருளிச் செய்கின்றார்.

உறழ்ச்சிப்பொருளில், இப்பாடலுக்குப் பொருள் கொண்ட நாம், ஏழாம் வேற்றுமை இடப்பொருளிலும் பொருள்காண இயலுகிறது. கனியின்கண் சுவையாக இருப்பவனும், கட்டி பட்ட கரும்பில் சுவை பயப்பவனும், பாவை நல்லாரிடத்து இன்பமாகத் திகழ்பவனும், தனிமுடி கவித்து ஆளும் அரசிடத்து மகிழ்ச்சி தருபவனும், இறைவனே என்பதை இப்பாடலில் அப்பரடிகள் விளக்குகின்றார்.

தலைசிறந்த சமயம் :

தலைசிறந்த சமயம் என்றால் அதில் மிகச் சிறந்த ஞானியர்களுக்கும் இடமிருக்க வேண்டும். அதனோடு, ஓரளவு கற்றவர்களுக்கும், சாதாரண மனிதர்களுக்கும் அச்சமயத்தில் இடமிருக்க வேண்டும். அதுவே சிறந்த சமயம். இந்த அடிப்படையில் சைவம் – தலைசிறந்த சமயமாய் விளங்குவதை அப்பரடிகளின் ஒரு திருப்பாடல் அழகுற விளக்குகின்றது. இன்ப துன்பங்கள் இயல்பு என்பதை ஞானியர் உணர்வர். சாதாரண அறிவு படைத்தவர்கள் இறைவனது அருளிப் பாட்டால் நலம் விளையாவிடின் அதனை வினைப் பயன் என உணராது, வழிபாட்டிலேயே ஐயுறுவர். இத்தகையோரும், நம்பிக்கையோடு பின்பற்றும்படி நின்கருணைப் பெருக்கினை வழங்கியருளவேண்டும் என அப்பர் பெருமான் வேண்டும் திருப்பாடல் ஆழ்ந்த நோக்கமுடையது.

" பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பே கவலை பிணிஎன் றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்

என்போலிகள் உம்மை இனித்தெளியார்
அடியார் படுவது இதுவே யாகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே "

வினையின் வந்தது இவ்வுடல். வினைக்கு விளைவாக வந்ததும் இவ்வுடலே என உணர்வது ஞானியர்க்கே இயலுவது. சாதாரண அறிவு படைத்த மனிதன் இறைவனை வணங்குவது துன்பமில்லாத வாழ்வு பெறவும், கவலை இல்லாத மன நிலை அமையவும், பிணியில்லா உடல் அமையவுமேயாகும். இத்தகையோர்க்கு இறைவன் அருள் செய்யாதுபோனால் இவ்விறைவன் கருணையற்றவன் எனக் கருதிப் பெருமானின் திருவருளின் உண்மை உணராது அவனை வழிபடுதலை விட்டு நீங்குவர். எனவே, அத்தகையோருடைய நம்பிக்கைக்கும் உரிய வகையில் உன் கருணை அமைய வேண்டுமென வேண்டும் இப்பகுதி, சைவ-சமயத்தின் விரிந்த அருள் எல்லையை விளக்குகின்றது.

மகளிர் வளர்த்த சைவ நெறி :

இன்று பெண்ணினத்தின் பெருமைபற்றி உலகில் பெருமைப்படப் பேசப்படுகின்றது. ஆயின் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நமது சைவ சமயம் பெண்மைக்கு வழங்கிய சிறப்பும், இன்றியமையாமையும் வியக்கத்தக்கன. சமுதாய சேவை முதலியன போன்ற வெளியுலக வாழ்வில் அவர்களுக்கு அதிக வாய்ப்பில்லாதிருந்தாலும், இல்லறத்தின் ஆணிவேர்போன்று இல்லத்திலே இருந்து, நாட்டுக்கும், சமயத்திற்கும், மொழிக்கும் நமது மகளிர்கள் இயற்றியுள்ள பெருமிதமிக்க பணிகள் நமது அறுபத்து மூவர் வாழ்வில் தெளிய விளங்கும்.

திலகவதியார், நமக்கு ஆசாரியராகத் திகழும் அப்பர் பெருமானை வழங்கிய பெருமைக்குரியவர். காரைக்காலம்மையார் வணிக குலத்தைச் செம்மைப்படுத்தி சமய சம்பிரதாயங்களையும், பாரம்பரியங்களையும் அருளியவர். இறைவனது கயிலாயத்தினைக் கால்களால் மிதித்தற்கஞ்சிய அவரது பண்பாடு, ஞானசம்பந்தர் முதலிய பெருமக்களால் பின்பற்றப் பெற்ற சிறப்பினைக் காணுகின்றோம். பெண்மையினின்றும் மாறாது, செந்தமிழ்ப் பாண்டி நாட்டையே காத்துக் கொடுத்த பெருமை மங்கையர்க்கரசியார்க்கே உரியது. இவ்வாறு செந்தமிழும்-சிவநெறியும் உலகிற்கு வழங்கிய பண்பாடுகளையும் - படிப்பினைகளையும் அப்பர் பெருமானின் இக்குருபூஜைத் திருநாளில் சிந்தித்துத் திருவருளும், குருவருளும் பெற்று அனைவரும் உய்யச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சகலாகமசார சங்கிரகம் *

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,
மகாவித்துவான். திரு. ச. தண்டபாணிதேசிகர்

எழுந்தது முதல் நீராடி ஆடையுடுத்தும்வரை :

கிழக்கே உதித்த சூரியன் மறுநாள் கிழக்கேதான் காணப் படுகிருன். வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியிற்சென்ற மனிதன் மீளவும் வீட்டுக்குத்தான் திரும்புகிருன். சந்திரமண்டலத் திற்கோ அல்லது செவ்வாய் மண்டலத்திற்கோ சென்ற மனிதன் மீளவும் தன்னூருக்குத் திரும்புகிருன். அது போல மனித நாகரிகமும் பழக்க வழக்கங்களும் மீள மீளத் தன்னிலேக்கே திரும்புவதை மக்கள் அணியும் ஆடை அணி உணவு முதலிய வற்ருல் காண்கிருேம். ஆகையால் எதுவும் பழைமை இல்லே. புதியனவும் இல்லே. சிறிது சிந்திக்கத்தான் வேண்டும். எல்லா வற்றிலும் கடைந்தெடுத்த நன்மைகளும், சுகாதார முறைகளும் உள்ளன.

பழைய காலத்தில் நம்முன்னேர்கள் பழகிய ஆசார சீலங் கள் உதவாக்கரை. காலந்தெரியாத மடிசஞ்சித்தனம் என்று சொல்லிவிட முடியாது. நாம் திரும்பவும் அங்குத் தான் போய்க் கொண்டிருக்கிருேம். ஆனுல் கவனிப்பதில்லே. நாம் எங்கோ புதிய இடத்திற்குப் போவதாக எண்ணுகிருேம். இந்தச் சிந்தனே யோடு பழைமையைப் பார்ப்போம். புதுமையாகத் தோன்றும். ஆதலால் ஆகம விதிகளேப் பழைமையானதென்று ஒதுக்க முடியாது.

நாட்கடன்களேக் காண்போம் :

முன்னேரத்திலே படுத்து (அதாவது இரவு ஒன்பது மணிக்கு மேற்போகாமல் படுத்து) விடியற்காலேயில் சிவபெரு மானேத் தொழுதுகொண்டே எழுந்திருக்க வேண்டும். பின்னர் விருப்பமான செயல்களில் தனித் தனியே செயற்படுக.

சாதகர்களுக்கும், சந்நியாசிகளுக்கும் நன்மை விளேயும் பொருட்டு, சௌசம் ஆசமனம் இவற்றின் இலக்கணங்களே நன்கு சொல்கிறேன்.

— சோமசம்புபத்ததியில்:

* சுலோகம் 1 முதல்.

பிராமி முகூர்த்த இலக்கணம் :

ஞானி பிராமி முகூர்த்தத்தில் தூய மனத்தினனாக இருந்து சிவத்தைச் சிந்திக்கக்கடவன். பிராமி முகூர்த்தமாவது நாடோறும் இரவின் மூன்றாஞ் சாமத்தின் மூன்றுநாழிகைக்குப் பின்னதாகும்.

ஒலிகள் உண்டாகும் காலம் பிராமி முகூர்த்தம் எனப்படும் அதற்குப் பின் நான்கு நாழிகையளவு அருணோதயம் எனப் பெறும். இதுதான் துறவிகள் கங்கைக்கு ஒப்பான நீரில் நீராடுங் காலமாகும். — சுப்ரபேதம்.

இரவை நான்காகப் பகுத்து, இறுதிப் பகுதியில் அதாவது நான்காம் சாமத்தில் நித்திரை விட்டு எழுந்து தெய்வீகக் கண்ணால்விளைவைக் கண்டு' - வேறு நூலில்:

எங்ஙனம் காண்பது எனில் : மேலானதும், விண்வடிவானதும், இடம்காலம் முதலான ஆதாரங்களைக் கடந்ததும் ஆன சிவத்தையாவது, அல்லது பிரமரந்திரத்தில் (உச்சிக்குழியில்) ஒலியோடு கூடிய ஒளியான லிங்கத்தையும், அனாகதஸ்தானமான புருவமத்தியில் சூக்ஷ்மமான பிந்துவடிவான சிவத்தையாவது அல்லது நெற்றியில் மேலான எழுத்து (ஓம்) வடிவத்தையாவது. இதயத் தாமரையில் மேலானவற்றிற்கெல்லாம் மேலான ஒளி வடிவாகவாவது அங்குஷ்ட அளவான (கட்டை விரல் அங்குல வடிவான) பருவடி வாகவாவது சதாசிவத்தைத் தியானிக்க.

— ஞானரத்னாவளி.

விடியலில் எழுந்து, முதலில் தோத்திரம் செய்து, வணங்கி, அன்று செய்ய வேண்டிய சுபகாரியங்களைச் சிந்தித்து, கையில் தண்டமும் கமண்டலமும் தாங்கி வெளியிற் சென்று,

— அஜிதாகமம்.

விடியலில் செய்யவேண்டியவை :

கையில், மண், குச்சி, கோமயம் (பசுச்சாணி) பூ, எள்ளு, சுபமான நெல்லிமுள்ளி, தருப்பை முதலான பொருள்கள், இவற்றை எடுத்துக்கொண்டு கடலொடு கலக்கும் ஆற்றினை அடையக் கடவன். — காலோத்தர ஆகமம்

ஊரிலிருந்து நூறுமுழம் வெளியே சென்று, நகரமாயின் அதைப் போல நான்கு மடங்கு வெளியே சென்று (அதாவது நானூறு முழம் சென்று) — சிவதருமம்.

ஈசானதிசை (வடகிழக்கு) தவிர ஏனைய திசைகளில் இஷ்டம் போற் செல்லலாம். — சகஸ்ரதந்திரம்

தரையைப் புல்லால் மறைத்து, சிரத்தைத்திருப்பிக்கொண்டு செய்க. — சிவதருமோத்திரம்

ஏ தேவதைகளே! முனிவர்களே! கண நாதர்களே! நீவிர் அனைவரும் எழுந்திருங்கள் நான் பூமியை வெளியிடமாகச் செய்யப் போகிறேன், என்று சொல்லி, — வேறிடத்தில்.

பகலில் கிழக்கு, நோக்கியும் இரவில் தெற்கு நோக்கியும் நள்ளிரவில் நிருதித்திசையை நோக்கியும் (தென்மேற்கு) காலையும் மாலையுமாகிற இரண்டு சந்தியா காலங்களிலும் பகலிற் போல கிழக்கு நோக்கியும், கழிக்க. — சர்வஞானோத்திராகமம்.

காற்றுக்கு எதிராக ஒரு போதும் மலசலங் கழித்தல்கூடாது. — சந்தானுகமம்.

சூரியனை வலப்பாகமாக வைத்து மலசலங்கழிக்க.

நெருக்கடியான நேரத்தில் இஷ்டம்போல எந்தத் திசையைப் பார்த்தும் கழிக்கலாம். — வேறிடத்தில்

வாய்பேசாமல், முக்காமலும், மூச்சிமுக்காமலும், சூரியனை நோக்கியும், நீர்க்கரைக்கணுமையிலும், சந்திரன், பசு, பிராமணன் இவர்களை நோக்கிக்கொண்டும், தேவாலயத்திற்கு அண்மையிலும், கிணறு, கோயில்கள், சாம்பர் நிலம் இவற்றிலும், தலங்களிலும், மர நிழலிலும் நதியிலும், நீர்க்குள்ளும், குளிர்ந்தமர நிழலிலும், கடறகரையிலும், போர்க்களத்திலும், நடுவீட்டிலும், அறிஞன் மலசலங் கழித்தலாகாது. — பாத்மபுராணம் (தொடரும்)

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாருவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் நள ஆண்டு மாசித் திங்கள் 20 ஆம் நாள் (3—3—77) வியாழக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருக்கோடிகா அருள்மிகு வடிவம்மை உடனுகிய அருள்மிகு கோடிகாவீசுவரர் திருக்கோயிலிலும், திருமங்கலக்குடி அருள்மிகு மங்களநாயகி உடனுகிய அருள்மிகு புராணேசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புவழிபாடுகள் நடைபெறும். அவ்வமயம் 'திருக்கோடிகா திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெறுவதுடன் திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெறும். அன்பர்கள் பலரும் வந்து வழிபாட்டில் கலந்து கொண்டு பயன் பெறுவார்களாக. அன்று ஆதீனப்பல்கலைக் கல்லூரி மாணவர்கள் உழவாரப் பணி செய்வார்கள்.

அல்லாப் பிள்ளையார்

தருமபுரம், திரு. ரா. சு. பாரத்வாஜன்

தண்ணீர் குடிக்க ஒரு குளத்தில் இறங்கிய ஒரு யானையின் காலை அந்தக் குளத்திலிருந்த ஒரு பெரிய முதலை கவ்வி குளத்திற்குள் இழுக்க ஆரம்பித்தது. முதலையின் சக்தியோ யானையின் பலத்தைவிட மிக அதிகமாக இருந்தது. யானையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தான் தப்பிக்கமுடியாது என்ற ஒரு நிலை ஏற்பட்டது. கஷ்டம் அதிகரிக்கும்காலத்தில்தான் ஜீவன்களுக்குக் கடவுள் நினைவு வரும். இந்த யானையும் இதற்கு விதிவிலக்கு இல்லை. தன் உயிரைக் காப்பாற்ற கடவுளால்தான் முடியும் என நினைத்து "ஆதி மூலமே" என்று அலறிற்று. வைகுண்டத்தில் இருந்த பகவான் காதில் இந்த ஒலம் கேட்டதக்ஷணமே கருடன் மேல் சவாரி செய்து குளக்கரையில் வந்து யானையைக் காப்பாற்றினர். இந்த நிகழ்ச்சி திரேதாயுகத்தில் நடந்தது.

இனி கூறப்போகும் நிகழ்ச்சி தஞ்சை ஜில்லாவில் 1973 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நடந்தது. இதை நான் கேட்டு அறிந்தபடி நேரில் பார்த்தபடி இங்கு எழுதுகிறேன்.

மாயவரம்-பட்டுக்கோட்டை இருப்புப்பாதையில் தில்லை விளாகம் என்ற ஓர் இரயில்வே நிலையம் இருக்கிறது. இரயில்வே நிலயத்தை ஒட்டினாற்போல திருத்துறைப்பூண்டியிலிருந்து முத்துப்பேட்டை வழியாகச் செல்லும் நெடுஞ்சாலை உள்ளது. இந்தச்சாலை இரயில் பாதையைக் கடந்து செல்கிறது. இரயில் வரும் நேரங்களில் கேட் சாத்தப்பட்டிருக்கும். மணிக்குக் குறைந்தது 6, 7, பஸ்கள் திருத்துறைப்பூண்டியிலிருந்து முத்துப் பேட்டைக்கும் அதேபோல முத்துப்பேட்டையிலிருந்து திருத் துறைப்பூண்டிக்கும் செல்லும். இருப்புப்பாதைக்கு மேற்கே சாலையின் வடபுறத்தில் ஒரு சிறிய குட்டை சுமார் 4 அடி தண்ணீர் இருக்கும். பாசிபடிந்து இருக்கும் அந்தக் குட்டையின் கரையில் சுமார் 2½ அடிக்கு 2 அடி நீள அகலத்தில் ஒரு கருங்கல் இருந்ததாம். மலஜலம் கழிப்பவர்கள் குளத்தில் சுத்தி செய்து

கொண்டு கால்களை இந்தக் கருங்கல்லின்மேல் தேய்த்து சுத்தி செய்து வருவது வழக்கம்.

சம்பவம் நடந்த அன்று பகல் 12 மணி இருக்கும். இரயில் வரும் நேரமாகையால் கேட் மூடப்பட்டு இருந்தது. இருபக்கங்களிலிருந்தும் இரயில்வே கேட் திறந்தவுடன் பஸ் போக்குவரத்து உண்டாகும்.

சுமார் 35 வயது உடைய ஒரு முஸ்லீம் மாது வெள்ளை வெளேறென்ற ஒரு துப்பட்டியைப் பர்தாவாகப் போர்த்தி இருந்தாள். கையில் ஒரு தாழங்கூடை; அதில் சாமான்கள். எட்டுமாதம் உள்ள ஒருகுழந்தையை இடுப்பில் வைத்திருந்தாள். பஸ்ஸில் பிரயாணம் செய்யவேண்டி பஸ்ஸுக்காகக் காத்திருந்து பின்னர் கேட் மூடியவுடன் சாலையின் ஓரத்தில் குட்டைக்கு எதிர்ப்புறத்தில் உட்கார்ந்துவிட்டாள். மடியிலிருந்த சுருக்குப் பையை எடுத்து வெத்திலைபாக்குப் போட ஆரம்பித்தாள். அவளுக்கு என்ன குடும்பக் கவலையோ! தன்னையும் மறந்து உட்கார்ந்திருந்தாள். (கேட் திறந்ததையோ இரயில் சென்றதையோ கவனிக்கவில்லை.) இவளுடன் இருந்த குழந்தை தவழ்ந்துகொண்டே சாலையின் நடுப்பாகத்திற்குச் சென்று விட்டது. அதையும் கவனிக்கவில்லை. திடீரென்று இருபக்கங்களிலிருந்தும் பஸ்கள் வரத்தொடங்கின. அந்த சப்தம் கேட்டு சுய நினைவிற்கு வந்தாள். குழந்தை நடுரோட்டில் கிடப்பதையும் எதிரில் வரும் இரு பஸ்களும் எந்த நிமிஷத்திலும் குழந்தையை நசுக்கிவிடும் என்பதையும் உணர்ந்தாள். அவள் நிலை விவரிக்க முடியாத பீதியில் இருந்தது. எழுந்தாள்; 'ரே அல்லா' என்று கத்தினாள். குழந்தையைத் தடுக்க ஓட ஆரம்பித்தாள். பர்தா தடுக்கிவிழுந்து மூர்ச்சையானாள். இரு பஸ்டிரைவர்களும் இதைப் பார்க்கவில்லை. ஆனால் குளத்தின் கரையிலிருந்து ஆடுபோன்ற ஏதோஒரு பெரிய பொருள் வேகமாக உருண்டு நடுத்தெருவிற்கு வருவதைக் கண்டார்கள். திடீரென்று ப்ரேக் போட்டு பஸ்ஸை நிறுத்திவிட்டார்கள். இரண்டு பஸ்களுக்கும் இடைவெளி சுமார் 1½ அடி இருந்தது. ஒரு பஸ்ஸுக்கு எதிரில் குழந்தையும் மற்ற பஸ்ஸுக்கு எதிரில் உருண்டுவந்த வஸ்துவையும் கண்டார்கள். பஸ்ஸில் இருந்தோர் இறங்கிவந்து குழந்தையைத் தூக்கினார்கள். சாலையின் ஓரத்தில் மூர்ச்சைபோட்டுக்கிடந்த முஸ்லீம் மாதைக் கண்டார்கள். அவளை ஆசுவாசப்படுத்தி குழந்தையை அவளிடம் ஒப்புவித்தார்கள்.

நடுத்தெருவிற்கு உருண்டுவந்த பொருள் என்ன என்று பார்க்க விரைந்தார்கள். அது பாசிபடிந்த பிள்ளையார் விக்ரகம்

எனக் கண்டார்கள். ஒருவராலும் உருட்டிவிடப்படவில்லை. தானாகவே உருண்டு வந்திருப்பதையும் கண்டார்கள். குழந்தையைக் காப்பாற்ற தானே உருண்டு வந்திருக்கிறது என்பதை அறிந்தார்கள். எல்லோருக்கும் மயிர்க் கூச்சல் ஏற்பட்டது. உணர்ச்சிவசப்பட்டு பிள்ளையாரை அப்படியே தூக்கி சாலையின் ஓரத்தில் வைத்து தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு வாங்கி வந்து நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டினார் கள். உள்ளூர் ஜனங்களும் கூடினார்கள்.

இந்தப்பிள்ளையார் அல்லா என்று அழைத்தவுடன் வந்ததால் 'அல்லா பிள்ளையார்' என்று பெயர் வைத்தார்கள். ஒரு சிறிய கூரை வேய்ந்தார்கள். தினமும் பூசைக்கு ஏற்பாடு செய்தார்கள். கோயிலின் வெளியில் ஒரு உண்டியலும் வைத்தார்கள். அந்த சாலையைக் கடக்கும் எல்லா பஸ்களும் கோயிலின் எதிரே நின்று போகின்றன. டிரைவர்கள் கற்பூரம் ஏற்றி தோப்புக் கரணம் போட்டு உண்டியலில் ஏதோ காசுகளையும் போட்டுவிட்டுச் செல்கிறார்கள்.

1973 ஜூன் மாத வாக்கில் சொந்த விஷயமாக பஸ்மூலம் அவ்வழியே பிரயாணம் செய்த எனக்கு பஸ் புறப்படும் முன்னரே இந்த அதிசயத்தைப்பற்றிச் சொன்னார்கள். கீற்று களால் வேய்ந்த கூரை கோயிலின் எதிரில் பஸ் நின்றபொழுது இறங்கிய பிரயாணிகளில் நானும் ஒருவன்.

பிள்ளையார் எண்ணெய் ஊறி பளபளவென்று இருந்தார். முகத்தில் ஒரு பெரிய சந்தனப்பொட்டு. அதன்மேல் குங்குமம் அவருக்கு ஒரு பூமாலை சாத்தப்பட்டிருந்தது. ஒரு வஸ்திரம் சுற்றப்பட்டிருந்தது. பிள்ளையார் முகத்தில் குறும்புத்தனம் இருப்பதுபோல் தோன்றிற்று.

இப்பொழுது அந்தப் பிள்ளையாருக்குக் கோயில் கட்டப் பட்டிருக்கலாம், மறுபடியும்போய் பார்க்கவேண்டுமென்ற ஆசை; எப்பொழுதுபார்க்கப்போறோம்என்பது அந்தப்பிள்ளையாருக்குத் தான் தெரியும்.

நன்றி.

— கலாவல்லி. டிசம்பர் – 1976.

நீண்ட நாட்கள் வாழ்வது எப்படி?

நீண்ட நாட்கள் வாழ்வது எப்படி என்ற ரகசியத்தை இங்கு நடைபெற்ற இந்திய விஞ்ஞான காங்கிரஸ் மகாநாட்டில் பிரபல விஞ்ஞானி டாக்டர். என். ஆர். தார் விளக்கினார்.

உணவில் தயிரைச் சேர்த்துக்கொண்டால் பல நோய்களிலிருந்து விடுபட முடியும். தயிரில் உள்ள லாக்டிக் அமில உயிரணுக்கள் உடலில் உள்ள பாக்டீரியாக்களைக் கொன்று விடுகின்றன. அளவுக்கு மிஞ்சி உணவு உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக கொழுப்புச் சத்துள்ள இறைச்சிகளை உட்கொள்ளக் கூடாது. அளவுக்கு அதிகமாக உணவு உட்கொள்ளுவதால் தசை அணுக்கள் அதிகம் வேலை செய்து வயோதிகத்தைத் துரிதப்படுத்துகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். பால், கோதுமை, காய்கறிகளை அதிகமாக உண்ணவேண்டும். முடிந்தால் மதுபானங்கள், புகைபிடிப்பதைத் தவிர்க்கவேண்டும். சீரான உணவு உட்கொண்டு, தினந்தோறும் உடற்பயிற்சி செய்தால் நீண்டநாள் வாழமுடியும் என்று டாக்டர் தார் மேலும் கூறினார்.

15 டிகிரி (சென்டி கிரேடு) வெப்பம் உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் பிற பகுதிகளில் வாழ்பவர்களைவிட அதிக நாட்கள் வாழுகின்றனர். ஆண்களைவிட பெண்கள் நீண்டநாள் வாழ்கின்றனர் என்றார் அவர். உடலில் அமிலம் சேருவதைத் தடுக்க டாக்டர் தார் மற்றொரு யோசனை கூறினார். ஒவ்வொருவரும் தம் சட்டைப்பையில் சோடாவை (கார்பனேட் பவுடரை) வைத்துக் கொண்டு ஒவ்வொரு உணவுக்குப்பின்னரும் அதில்ஒரு துளியை உட்கொள்ளவேண்டும் என்றார் அவர்.

நன்றி. 8—1—77 — சுதேசமித்திரன்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

Visit to the temple today has been one of the most blissfkul movements of my life.

(Sd.) A. R. BAJI,
Director of Field Publicity,
Govt. of India.

23—12—76.

சிவமூர்த்தங்கள்

"நஜன்"

(மலர் 35, இதழ் 12, பக்கம் 530 இன் தொடர்ச்சி)

லிங்கவகைகள் நான்கு :- சமகண்டம், வர்த்தமானம், சைவாதிக்யம், திரிராசிகம்.

சிவபாகம் விஷ்ணுபாகம் பிரும்மபாகம் மூன்றும் சமமாக இருந்தால் சமகண்டம். பிரும்மபாகத்தைவிட விஷ்ணுபாகமும் விஷ்ணுபாகத்தைவிட ருத்ரபாகமும் ஒவ்வொரு பங்குஅதிகமாக இருந்தால் வர்த்தமானம். பிரும்ம விஷ்ணுபாகம் சமமாகவும் ருத்திரபாகம் அதிகமாகவும் காணப்படுவது சைவாதிக்யம். லிங்கத்தின் உயரத்தை ஒன்பது பாகம் செய்து அதற்கேற்றாற்போல மற்ற பாகங்கள் அமைவது திரிராசிகம்.

லிங்கம்சுவாயம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ராக்ஷஸம், ஆர்ஷம், பாணம் என ஏழுவகைப்படும். இவைகளில் பாண லிங்கமே உயர்ந்தது. இவை ஒரு உளுந்து அளவிலிருந்து ஒரு முழ அளவு வரை காணப்படுகின்றன. பாணம் எந்த வர்ணமோ அதே வர்ணத்தில் பீடம் இருக்கவேண்டும்.

ஆன்மார்த்த பூஜைக்கு மட்டும் உபயோகமுள்ள லிங்கம் பன்னிரெண்டு; மணல், அரிசி, அன்னம், ஆற்றுமண், சாணி, வெண்ணெய், ருத்ராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, வெல்லம், மாவு இந்த லிங்கங்களுக்கு அளவு கிடையாது. பூஜித்தபின் தண்ணீரில் விட்டுவிடவேண்டும்.

குடிமல்லம் சிவலிங்கம் : மிகமிகப் பழமையான சிவலிங்கம் ஆந்திராவில் ரேணிகுண்டாவிற்கு 6 மைலிலுள்ள குடிமல்லம் என்ற கிராமத்தில் உள்ளது. இந்த லிங்கத்திற்கு ஆவுடையார் கிடையாது. 5 அடி உயரம் ஒரு அடி குறுக்களவு. பாணத்திலேயே சிவபெருமான் உருவம் உள்ளது. இரண்டே கைகள். காலின் கீழ் ஓர் அசுரன் மிதிபட்டுக்கிடக்கிறான்.

மகாலிங்கம் :- இந்தச்சிறப்புப்பெயரைப் பெற்றவர் திருஇடைமருதூர் ஈஸ்வரன். திருநெல்வேலியில் புடார்ச்சுனம் என்றும்

ஆந்திராவில் மல்லிகார்ச்சுனம் என்றுமிருப்பதால் இது இடை மருதூர் எனப் பெயர் பெற்றது. சோழநாட்டையே ஒரு திருக் கோயிலாகக்கொண்டு திருஇடைமருதூர் மகாலிங்கத்தை மத்திய ஸ்தானமாக வைத்துப்பார்த்தால் கோயில் சில்ப முறைப்படி இம்மூலஸ்தானத்திற்கு திருவலஞ்சுழி விநாயகர் சந்நிதியாகவும் திருவாவடுதுறை நந்தி இருப்பிடமாகவும் சுவாமிமலை சுப்பிரமணியசந்நிதியாகவும் சிதம்பரம் நடராஜர்சந்நிதியாகவும் திருவாரூர் சோமாஸ்கந்தர் சந்நிதியாகவும் ஆலங்குடி தக்ஷிணா மூர்த்தி சந்நிதியாகவும் விளங்குவது ஒரு விசேஷமாகும்.

இமயத்தில் :

இமயத்தின் சிகரத்திலே கயிலாயம், கேதாரநாதம், பத்ரி நாதம், பசுபதிநாதம் அமரநாதம் என ஐந்து க்ஷேத்திரங்கள் உள்ளன. இவை பதரிநாதம் நாராயணனுக்கு அமைந்தது. மற்றவை நான்கும் சிவக்ஷேத்திரங்கள்.

கைலாயம் திபேத்திலும் பசுபதிநாதம் நேபாளத்திலு முள்ளன. பனிலிங்கம் அமரநாத்குகை மிகப் பெரியது. 150 அடி நீளம், 150 அடி அகலம்; 150 அடி உயரம் பனிக்கட்டிலிங்கம் அமாவாசையன்று உருப்பெற ஆரம்பித்து பௌர்ணமியில் பூரணப் பொலிவு பெறும். அடுத்த அமாவாசைக்குள் கரைந்துவிடும். லிங்கம் தோன்றும காலத்தில் மட்டும் இரு புறுக்கள் அங்கு காணப்படுகின்றன. இவை அங்கு எப்படி வருகின்றன, எதை உண்டு ஜீவிக்கின்றன எல்லாம் மர்மமாகவே இருக்கிறது.

முகலிங்கங்கள்

லிங்கங்களில் முகத்தைப் பொருத்தி வழிபடுவதும் உண்டு. பெரும்பாலும் வட இந்தியாவிலே பல இடங்களில் இம்மாதிரி உள்ளது. லிங்கத்தில் பொதுவாக முகம் இருக்காது. முகமுள்ள கவசத்தை மாட்டி அலங்கரிப்பது உண்டு. ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் முகலிங்கம் என்ற பெயரிலேயே ஓர் ஊர் உள்ளது. முகம் பெற்ற லிங்கங்கள் நான்குவகை. ஆட்யம், அநாட்யம், ஸுரேட்யம், ஸர்வசமம்.

ஆட்யம் லிங்கபாணத்தில் 1001 சிறு லிங்க உருவங்கள் இருக்கும். ஸுரேட்யம் என்பது 108 லிங்கங்களைக் கொண்டது. (முகம் இல்லாமல் பல லிங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் முகலிங்கங்களே) ஸர்வசமம் 5 முகங்கள் கொண்டது ஈசானம் தத்புருஷம், அகோரம், வாமம், சத்யோஜாதம்.

ஏகாதிகம் லிங்க ஸஹஸ்ர மாட்யே
த்வஷ் டோத்தரம் லிங்க சதம் ஸுரேட்யே
விசேஷதஸ் ஸர்வஸமே ஸவக்த்ர
மாட்யேப்ய நாட்யே பிநதேவ பூஜ்யே.

—சித்தாந்த சாராவளி.

பஞ்சமுக லிங்கம் நேபாளத்திலுள்ள காட்மாண்டு பசுபதி நாத் கோவிலுள் உள்ளது. நான்கு திசையில் நான்கு முகங்கள். மேற்புறம் ஆகாசத்தைப் பார்த்து ஒருமுகம். நமது தேகத்தில் எப்படி உஷ்ணம் இருக்கிறதோ அதேமாதிரி இந்த சாலிக்கிராம பஞ்ச முகத்திலும் ஒரு வெதவெதப்பு சூடு இருந்து கொண்டே யிருக்கிறது. இந்த லிங்கம் கண்டகி நதியில் கிடைத்ததாகும். ஒருமுகம் உள்ளது போல மறுமுகம் இல்லை. மேற்கிலுள்ள முகம் துவாரகநாத். தெற்கிலுள்ளது ராமேஸ்வரம் கிழக்கிலுள்ளது. ஜகந்நாத் வடக்கிலுள்ளது பத்திரிநாத் ஆகாயத்தை நோக்கியுள்ளது பசுபதிநாத்.

மேற்குவாயிலில் நின்றகோலத்தில் நந்தி இருக்கிறது. மரத்தால் அமைந்த ஆலயம். கூரை பொன்வேயப்பட்டுள்ளது. காலபைரவர். தைரியசாலிகளும் பயப்படத்தக்க உருவில் இருக்கிறார். வடக்கு வாயிலில் 30 அடி உயரமுள்ள சூலம். அதற்கேற்ற தமருகம் கட்டி தொங்கவிடப்பட்டுள்ளது.

இதன் அருகிலே கோரக்கர் ஆலயம். வடநாட்டில் கோயில்களில் லிங்கங்களை எல்லோரும் தொட்டு பூஜை செய்வதுபோல இங்கு முடியாது.

அலங்கார காலத்தில் தரிசனம் காண்பதைவிட அபிஷேக காலத்தில் பசுபதிநாதரைக் கண் குளிர தரிசிக்கலாம்.

காலை 4 மணிக்கு மேற்கு வாசல் திறக்கும். 9 மணிக்கு ஸ்நானபூஜை ஆரம்பம். 9–30 லிருந்து 11–30 வரை ருத்ராபிஷேகம், பஞ்சாமிர்தாபிஷேகம். 12 மணிக்குப் பூர்ணகலசாபிஷேகம், சகஸ்ரநாமார்ச்சனை, நைவேத்தியம் முதலியன நடைபெறும். தூத்பேடா, கேசர்பாத், அவல், வாழைப்பழம் இவை நிவேதனம் செய்யப்பெறும். 2–30 மணிக்கு மகாநைவேத்தியமும் 3 மணிக்கு தீபாராதனையும் திருக்கோயில் திருக்காப்பு இடுதலும் நடைபெறும்.

மீண்டும் 6 மணிக்கு கதவு திறக்கப்பெற்று தீபாராதனை நிகழ்த்தப்பெறும். இரவு 9 மணிக்கு நான்கு வாயில்களும் திறக்கப்படும். விசேட தினங்களில் இரவு 12 மணிவரை பூஜை நடைபெறும்.

திருநாவுக்கரசருக்கு அருள்கிடைத்த திருவதிகையிலுள்ள ஆலய சுற்றுப்பிராகாரத்தில் ஓர் அற்புதமான பஞ்சமுக லிங்கம் காணப்படுகிறது.

எட்டுமுகலிங்கம்

கந்த்வா - ஆஜ்மீர் ரயில்பாதையில் மந்தஸெளர் என்ற தலம் உள்ளது. காளிதாஸன் தன் அபிக்ஞான சாகுந்தலத்தில் இங்குள்ள எட்டுமுக லிங்க மூர்த்தியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இது மிகவும் பெரியது. மிக வேலைப்பாடமைந்தது. இம்மாதிரி எட்டுமுக லிங்கம் வேறு எங்குமே கிடையாது. இந்த லிங்கம் 2000 ஆண்டுகட்கு முன்னுள்ளது என்று புதை பொருள் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். உயரம் 7½ அடி அகலம் 11 அடி 125 ராத்தல் எடையுள்ளது. ஷிவ்ன நதியிலிருந்து இது கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்று தலை லிங்கம்

பத்திரா நதிக்கரையில் லக்க வல்லி அருகில் (பத்திராவதியிலிருந்து 12 மைல்) மூன்று தலை லிங்க முள்ள சோமேஸ்வரர் கோயில் உள்ளது. வராஹ புராண பதினெட்டாம் அத்யாயத்தில் இதுபற்றிய செய்தி உள்ளது.

ஜோதிர்லிங்கத் தலங்கள்

சோதியாய் சுடராய் சூழொளி விளக்காய் துலங்குகிறான் இறைவன். உள்ளும் புறமும் ஒளிவளர் விளக்காக விளங்கும் இறைவன் பிரமரந்திரத்திற்கு மேல் பன்னிரண்டு அங்குலத்திற்கு மேல் ஆன்மாக்களால் தியானிக்கத் தக்கப்பொருளாகத் திகழ்கிறான். ஆகவே நம் முன்னோர்கள் பன்னிரண்டுத் தலங்களில் ஜோதிர்லிங்க தரிசனம் செய்வதைப் பெரும் பேறாகக் கருதினார்கள்.

'தமஸோமா ஜ்யோதிர்கமய' என்ற உபநிஷத் வாக்கியம் இருளிலிருந்து ஒளியாகிய என்னை அடைவாயாக என்கிறது. அதாவது இருள் சூழ்ந்த இந்த சம்சார சாகரத்திலிருந்து என்னை மீட்டு ஒளிவடிவனாகிய சிவபெருமானுடைய பேற்றினை அடைவிக்க வேண்டுகிறது.

சிவபெருமான் ஜோதி ரூபமாக நின்றதும் பிரமனும் மாலும் அடிமுடி தேட முயன்று தோல்வி யடைந்ததும் புராணக் கதை. ஆகவே ஜோதிர் லிங்கத்தலங்கள் பன்னிரண்டிலும் சிவனைத் தரிசித்து வழிபடுவது கிடைத்தற்கரிய பேறு ஆகும்.

(தொடரும்)

சிவாலயச் - சோழநாடு

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ.,

திருவருள் வயம் :

முடியுடை மூவேந்தருள் சோழர்களும், பாண்டியர்களும் சிற்சில காலங்களில் வேற்றுச் சமயங்களைச் சார்ந்திருந்தாலும், பெரும்பான்மையும் சைவ - வைணவ நெறிநின்றவர்களே. அவருள்ளும் சோழர்கள் சிவநெறி ஒன்றையே பற்றி நின்ற உறைப்புடையவர்கள். மூவர் முதலிகள் வாழ்ந்திருந்த காலத்திலேயே சோழநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட சிவாலயங்கள் இருந்தன என்பதை மூவர் தேவாரப் பாடல்பெற்ற சோழ நாட்டுத் திருத்தலங்கள் விளக்குகின்றன. தஞ்சாவூர் – திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், தென்னார்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளும் சோழநாடாகத் திகழ்ந்தன என்பதை வரலாறு பேசுகிறது. சோழர்களால் எண்ணற்ற திருப்பணிகள் செய்யப் பெற்று விண்முட்டும் கோபுரங்களோடு எழுந்து நிற்கும் சோழ நாட்டுச் சிவதலங்கள் அனைத்துமே ஆகமவிதிகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்றன. சோழநாட்டில் நிறைந்துள்ள பலவாகிய சிவாலயங்கள் இம்மண்ணில் பெருக்கெடுத்துப் பாய்ந்த பக்தி வெள்ளத்திற்குச் சான்றாக நிற்கின்றன. சோழ நாட்டிலுள்ள ஆலயங்களைத் தனித்தனியே நோக்கி மகிழ்ந்த அருளாசிரியர் ஒருவர், தம்பார்வையை விரிவாக்கிக்கொண்டு சோழநாட்டுத் தலங்களை எல்லாம் ஒருசேரத் தம் அகக்கண்ணால் கண்டார். திருவருள் வயத்தால் சோழப்பெருநாடே ஒரு சிவாலயமாக அவரது எண்ணத்துள் விரிந்தது. ஆகம நுட்பம் வளர்ந்த நெஞ்சம் அதனை முறைப்படுத்தி அழகிய ஓர் கவிதையாக வழங்கியது.

அழகிய கவிதை :

நாம் சென்று வழிபடும் சிவன் கோயிலைத் தத்துவக் கண் கொண்டு பார்த்த திருமூல நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் மனிதவுடல் அமைப்பிலேயே அதனைக் கண்டு விளக்கினர்.

க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் பாடிய ஆசிரியரோ சோழ நாட்டினையே சிவாலயமாகப் பார்க்கும் விரிவினைப் பெறுகிறார். அவர் பார்வையில் விநாயகர், முருகன், நந்தியெம்பெருமான், பைரவர், நவக்கிரகங்கள், நடராசப்பெருமான், சோமாஸ்கந்தர் சண்டிகேஸ்வரர் முதலிய மூர்த்திகள் புடைசூழ இறைவர் நடு நாயகமாக எழுந்தருளியிருந்து அருள் வழங்கும் சிவபெருமானின் சிவலிங்கத் திருமேனியோடு கூடிய ஆகம வழிப்பட்ட சிவன் கோயில் அமைப்புக்கொண்டு சோழப் பெருநாடே ஒரு சிவாலய மாக விளங்குகிறது.

“ திருவலஞ் சுழிஐங்க ரத்தன் ஆ லயமெனத்
திருஏர கப்பதியெனும்
திருநகரம் முன்பொன் ஆ லயம்எனச் சேய்ஞலூர்
திகழ்சண்டி ஆலயம் என
மருவும்ஆ வடுதுறைவன் விடையின் ஆ லயம்என்ன
வந்த சூரி யன் ஆலயம்
மகிழ்சூரி யன்கோயில் ஆம்எனச் சீகாழி
வடுகன்ஆ லயமாம் எனப்
பெருகுசிற் சபைசபா பதியின்ஆ லயமெனப்
பேசுதிரு வாரூர் நகர்
பெரியநா யகர்கோயில் என்னவா ணோர்களும்
பேணும் இவை மத்தியாகத்
தருமருத வனம்மகா லிங்கநா யகன்மதலை
சப்பாணி கொட்டி யருளே
தந்தைவெண் காடர்புகழ் எந்தைமுரு கேசனே
சப்பாணி கொட்டியருளே. ”

சோழக்கோயில் :

இவ்வழகிய பாடலில் மருதவனம் எனப்படும் திருஇடை மருதூர் இறைவனே இலிங்கமூர்த்தி, திருவலஞ்சுழி, விநாயகர் கோயில், திருஏரகம் எனப்படும் சுவாமிமலை, முருகன்கோயில், திருச்சேய்ஞலூரை அடுத்த திருஆப்பாடி, சண்டிகேஸ்வரர் இருப்பிடம், திருவாவடுதுறை, நந்தியம்பெருமான் நிலைகொண்ட இடம், சூரியனார்கோயில், நவக்கிரஹங்கள், சீகாழி, பைரவர் கோயில், தில்லை, நடராச மூர்த்தம், திருவாரூர், சோமாஸ்கந்தர் இருப்பிடம் எனப்பேசப்படும் அழகினைக்காண்கிறோம். சோழநாட் டின் அமைப்பினையும் மேற்கூறப்பெற்ற தலங்களின் இருப்பிடங் களையும் நன்கு அறிந்தவர்களுக்குத் திருஇடைமருதூர் மகாலிங்கப் பெருமானை நடுநாயகமாகக்கொண்டு ஆகம வழிப்பட்ட ஒரு பெருங்கோயில் சோழப்பெருநாடாக அமைந்திருப்பது இனிது விளங்கும். சற்று விரிவாகக் காண்போம்.

எண்டிசைக்கும் இடைமருது :

திருஇடைமருதூர் சோழநாட்டின் நடுநாயகமாக விளங்குவது மட்டுமின்றி எட்டுத் திசைகளுக்கும் நடுவிடமாக விளங்கி மகாலிங்கத் தலமாகத் திகழ்கின்றது என்ற அரிய குறிப்பு ஒன்றினை அப்பர் பெருமான் தம் திருக்குறுந்தொகையில் குறித்தருளுகின்றார்.

" வண்ட ணைந்தன வன்னியும் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனார்
எண்டி சைக்கும் இடைமரு தாஎன
விண்டு போய் அறும் மேலை வினைகளே "

மேற்காட்டப்பட்ட க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழில் காணப் பெறாத ஒரு குறிப்பை முதன் முதலாக டாக்டர். திரு. உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் கண்டு எழுதினார்கள். அது, மகாலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருஇடைமருதூருக்குத் தென்பால் கும்பகோணம் - இராஜமன்னார்குடிப் பெருந்துப்பாதையில் அமைந்துள்ள தேவாரப் பாடல் பெற்ற சிவதலமாகிய திரு இரும்பூளை என்னும் ஆலங்குடி தென்முகக் கடவுளாகிய ஸ்ரீ தெட்சணாமூர்த்தி எழுந்தருளியிருக்கும் தலமாக அமைந்திருக்கிறது என்பதே.

அகச்சான்றுகள் :

திருவருள் வயத்தால் அமைந்த இவ்வரிய ஒப்புமைகளை விளக்கும் வண்ணம் திருஇடைமருதூர்த் தேவார திருவாசகங்களும், ஏனைய அருட் பனுவல்களும் அமைந்துள்ளமை வியப்பூட்டுகின்றது. திருஇடைமருதூர்ப் பதிகங்களுள் சுற்றுத்தலங்களாகிய மேற்குறித்த தலங்களுள் பல இணைத்துப் பேசப்பெற்றிருப்பது ஓர் அருமைப்பாடாகவே திகழ்கின்றது. சோமாஸ்கந்த தலமாகிய திருவாரூரை அப்பர் பெருமான் தம் திருத்தாண்டகத்துள்,

" அணிபொழில்சூழ் ஆரூர் உறைகின்றாரும்
ஏகம்பம் மேயாரும் எல்லாம் ஆவார்
இடைமருது மேவிய ஈசனாரே "

எனக் குறித்தருளினார். நடராசப்பெருமானுக்குரிய தில்லையின் குறிப்பு,

" கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையும் காய்ந்தார் போலும்
இடைமருது மேவிய ஈசனாரே "

எனவும், தட்சணாமூர்த்தியின் குறிப்பு,

" ஆல நிழல்விருப்பர் ஆகாயத்தார்
... ...
இடைமருது மேவி இடங்கொண்டாரே"

எனவும் அப்பர் பெருமானால் குறித்தருளப்பெற்றன. திரு ஏகம்பமுடையார் திருவந்தாதியில் தோணிபுரமாகிய சீகாழியின் குறிப்பு அமைந்து பைரவத்தலத்தினை மகாலிங்கத் தலத்தோடு இணைக்கின்றது. கூறுமின் தொண்டர் என்று தொடங்கும் அவ் வரும் பனுவலுள்,

"...................... திருத் தோணிபுரம் பழமை
ஆறுமின்போல் சடை வைத்தவன் ஆரூர் இடைமருதென்று
ஏறுமின் நீர்எம் பிரான் கச்சி ஏகம்பம் நண்ணுமினே"

எனத் திருவாரூரும் இணைகிறது. இத்தகு அரிய குறிப்புக்களே க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ் ஆசிரியருக்குச் சோழ நாட்டினையே சிவ தலமாகக் காணும் எண்ணத்தை ஊட்டியிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு.

தலையாய திருத்தலம் :

எங்கும் நிறைந்து, எல்லாமாகவும் விளங்குகின்ற சிவபரம் பொருள் உயிர்கள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டு பற் பல திருத் தலங்களைத் தோற்றுவித்து அருளினார். அவற்றுள் அருணாசலம், ஸ்ரீ காசி, திருக்காளத்தி, திருக்கேதாரம், திருவாரூர், திருவலஞ்சுழி, திருவேரகம், சிதம்பரம், திரு வெண்காடு, கும்பகோணம் மத்தியார்ச்சுனம் என்னும் பதினொரு தலங்களும் மிகச்சிறந்தன. இவற்றுள்ளும் அநாதியாக இருத்தலானும் எல்லா உயிர்களும் ஒடுங்கிய மகாராத்திரியில் அவ்வுயிர்களை எழுப்புதற் பொருட்டு, ஏகாதச ருத்திரர்கள் வந்து வழிப்பட்டுச் சிவனருள் பெறும்படி விளங்கியமையானும் திருவலஞ்சுழி முதலிய மிகச்சிறந்த தலங்களை விநாயகர் முதலிய பரிவார தெய்வங்களின் தலங்களாகக் கொண்டிருத்தலானும் மத்தியார்ச்சுனம் எனப்படும் திருஇடைமருதூரே மிகச் சிறந்த தாகப் போற்றப்படுகிறது.

மத்தியார்ச்சுனம் - விளக்கம் :

திருஇடைமருதூர் வடமொழியில் மத்தியார்ச்சுனம் என வழங்கப்பெறும். மத்தியம் என்பது இடையில் உள்ளது என்னும் பொருள்படும். அர்ச்சுனம் என்பது தலவிருட்சமாகிய மருத மரத்தின் வடமொழிப்பெயர். வடக்கே உள்ள ஸ்ரீசைலம் ஒரு மருதூர். அதற்கு மல்லிகார்ச்சுனம் எனப் பெயர் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருப்புடைமருதூர் புடார்ச் சுனம் எனப்படும். இவற்றுக்கு இடைப்பட்ட இம்மருதூர்

திருஇடைமருதூர் என வழங்கலாயிற்று என்பர். டாக்டர். திரு. உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் இத்தலப்பெயருக்குத் தத்துவப் பொருள் காண்பர்.

" மத்திபம் - நடு. அர்ச்சுனம் - நின்மலம். இது நின்மலமானஸ்தானம் என்று பொருள்பட்டு, மத்திய சப்தத்தோடு சேர்ந்துநின்று, இத்தன்மையையுடைய (ஆதிசக்தியின் ஹிருதயகமல) மத்தியஸ்தானத்தை உணர்த்திப் பின்பு அந்த ஹிருதயகமலமத்தியில் தியானிக்கப்பட்டு விளங்கிய ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமான் முனிவர்களுக்குக் காட்சியளித்தற்பொருட்டு இங்கே எழுந்தருளியிருக்கின்றமையால் அப்பெயர் இந்த க்ஷேத்திரத்திற்கும் வந்தது."

என்பது அவர் கூறும் விளக்கம்.

மூலஸ்தானம் - (மகாலிங்கம்) திருஇடைமருதூர் :

திருஇடைமருதூர் தெரு அழகு என்பது பழமொழி. ஒருக்கால் திருஇடைமருதூர் திருஅழகு என்பதே இவ்வாறு திரிந்ததோ என எண்ணும்வண்ணம் மகாலிங்கப்பெருமான் மிகப் பெரிய கோலத்தோடு இத்தலத்தில் 'ஜோதி மகாலிங்கமாக'க் காட்சி அளிக்கிறார். பெரிய திருக்கோயில். நால்வர் பெருமக்களாலும் பாடப்பெற்றதலம். திருவிசைப்பா, திருப்புகழ் முதலியனவும், பட்டினத்தார் பாடல்களும் இத்தலத்திற்குண்டு. தைப் பூச விழா, வைகாசி விழா முதலியன சிறப்புடையன. மிகச் சிறந்த பிரார்த்தனைத்தலம். மருதவன புராணம் என்ற தலைப்பில் தல புராணம் உள்ளது. இத்தலத்துறையும்பெருமான் தன் அடியார்களுக்கு இனியனுதலை அப்பர்பெருமான்,

" களியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழல் பாவை நல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே "

என்ற அழகிய திருக்குறுந்தொகையால் விளக்கியருளுவர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று வகையிலும் தலைசிறந்த இத்தலத்தின் சிறப்புக்களை முழுவதும் இங்கே விளக்க இயலாது. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சியில் உள்ளது. இத்தலம் கும்பகோணம் — மாயூரம் பேருந்துப் பாதையில் விளங்குகின்றது.

நந்தியெம்பெருமான் ; திருவாவடுதுறை :

திருவாவடுதுறை, மகாலிங்கப்பெருமானுக்கு நேர்கிழக்கில் நந்தித்தலமாக விளங்குகின்றது. சிவபிரான் ஆணையால் பசு

வடிவம் பெற்ற அம்மை பூசித்த தலம். திருமந்திரம் அருளிய திருமூலர், போகர், கொங்கணர் முதலிய சித்தர்கள் வாழ்ந்திருந்த இடம். மணிவாசகருக்குக் குருவடிவில் இறைவன் காட்சியும், சுந்தரருக்குத் தியாகர் காட்சியும், ஞானசம்பந்தர்க்குப் பொன் முடிப்பும் கிடைத்த தலம். திருமாளிகைத்தேவர் போகருக்குத் தொண்டுசெய்து சைவ நிறுவனம் கண்டது. தருமதேவதை யாகிய நந்தியெம்பெருமான் தமது போதி அம்பலமாகிய அரச மரத்தடியில் கோயில்கொள்ள வரம்பெற்றது. மிகப் பெரிய நந்தி உள்ளது ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளால் தோற்றுவிக்கப் பெற்ற திருவாவடுதுறை ஆதீனம் இங்கு விளங்குகின்றது. இவ்வாதீனத்தின் அருளாட்சியில் இத்தலம் விளங்குகின்றது. நரசிங்கன்பேட்டை புகைவண்டி நிலையத்திற்கு ஒருகல் கிழக்கில் இத்தலம் அமைகிறது.

விநாயகப்பெருமான் ; திருவலஞ்சுழி :

பாடல்பெற்ற சிவதலமாகிய திருவலஞ்சுழியில் இந்திரவிமா னத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெள்ளைப்பிள்ளையார் பெயரால் இத்தலம் வெள்ளைப்பிள்ளையார்கோயில் என்றும் அழைக்கப்படு கிறது. அமிர்தம் கடைந்த திருப்பாற்கடல் நுரையால் ஆக்கப் பெற்று அமிர்தத்தால் அபிடேகிக்கப்பெற்றவர் ஸ்ரீ வெள்ளை விநாயகர். பச்சைக்கற்பூரமே இவருக்கு அபிடேகம். விநாயகர் எழுந்தருளியிருக்கும் இந்திரவிமான மண்டப பலகணி உலகப் புகழ் பெற்ற அமைப்புடையது. பிலத்தில் சென்றுவிட்ட காவிரி ஏரண்ட முனிவரைப் பலிகொண்டு வலமாகச் சுழித்து எழுந் தமையின் திருவலஞ்சுழி என்னும் பெயர் பெற்றது. மகாலிங்கப் பெருமானுக்கு நிருதி (தென்மேற்கு) மூலையில் விநாயகர்த் தலமாக திருவலஞ்சுழி விளங்குகின்றது. சுவாமிமலை புகை வண்டி நிலையத்திலிருந்து மிக அருகில் இத்தலம் அமைந்துளது.

முருகப்பெருமான் ; திருஏரகம் (சுவாமிமலை) :

அறுபடைவீடுகளுள் ஒன்றாகிய இத்தலம் ஏரகம் என்று திருமுருகாற்றுப்படையில் குறிக்கப்படும். இதனை மலைநாட்டகத் தோர் சிற்றூர் என உரைகாரர் குறித்தார். அருணகிரிநாதர் இதனையே ஏரகம் எனக்கொண்டு திருப்புகழ் அருளி உறுதி செய்தனர். முருகப்பெருமான் குருவாக எழுந்தருளி சிவபிரானுக்குப் பிரணவப்பொருள் உரைத்த தலம் இது. மகாலிங்கப்பெருமானுக்கு நேர் மேற்கில் முருகன் சந்நிதியாக விளங்குகின்றது சுவாமிமலை. திருவலஞ்சுழியிலிருந்து ஒரு கல் வடக்கில் இத்தலம் அமைகிறது. கும்பகோணம், திருவையாறு பேருந்துத்தடத்தில் உள்ளது. சோழநாட்டின் மிக அழகிய கட்டுமலைக்கோயில் இது.

சண்டேசுவரர் - திருவாப்பாடி - (சேய்ஞலூர்)

மேற்குறித்த க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழில் இத்தலம் "சேய்ஞலூர் திகழ் சண்டி ஆலயம்" என்று குறிக்கப் பெற்றுள்ளது. சேய்ஞலூர் சண்டிகேசுவரர் அவதரித்த தலம். சண்டிகேசுவரர் தொண்டு செய்து பேறுபெற்ற திருவாப்பாடி திருச்சேய்ஞலூருக்கு அருகில், திருப்பனந்தாளுக்குத் தென் மேற்கில் மண்ணியாற்றங்கரையில் உள்ளது. மகாலிங்கப் பெருமானுக்கு வடக்கில் சண்டிகேசுவரர் சந்நிதியாகத் திருவாப் பாடி விளங்குகின்றது. தமது சிவபூசையினைத் தடுத்த தந்தை யின் காலைவெட்டி சிவபெருமான் அருள்பெற்ற சண்டிகேசுவரர் திருவாப்பாடியில், பிற தலங்களில் உள்ளதுபோல் இல்லாமல், சிவசந்நிதியில் தனிப்பெருஞ் சிறப்புடன் திகழ்கின்றார் இத்தலத் திற்கு ஆடுதுறை கும்பகோணம் முதலிய இடங்களிலிருந்து பேருந்து வசதி உண்டு.

சூரியன் - (நவக்கிரகம்) - சூரியனார்கோயில் :

திருஇடைமருதூருக்கு வடகிழக்கில் நவக்கிரகத்தலமாக விளங்குவது சூரியனார்கோயில். ஆடுதுறைக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. நவக்கிரகங்களில் ஏனையவற்றிற்குத் தனித்தனி கோயில் சுற்றிலும் அமைய நடு நாயகமாகச் சூரியன் விளங்கும் மாபெரும் நவக்கிரகத் தலம் இது. வட இந்திய மக்களாலும் பெரிதும் வணங்கப்பெறும் இத்தலம் சிறந்த பிரார்த்தனைக்குரியதாக விளங்குகின்றது.

நடராசப்பெருமான் - சிதம்பரம் :

'கோயில்' என்று சிறப்பிக்கப்படும் சிதம்பரம் தரிசிக்கமுத்தி தரும் நடராசப் பெருமானுக்குரிய தலமாக விளங்குவது. உலக மெலாம் உய்ய 'பரானந்த போதக் கூத்தினை'ப் பெருமான் இத்தலத்தில் நிகழ்த்தியருளுகின்றான். மகாலிங்கப்பெருமானுக்கு வடகிழக்குத் திசையில் இத்தலம் நடராச மூர்த்தமாக விளங்கு கின்றது. சைவர்களால் மிகுதியாகப் போற்றி வணங்கப்பெறும் சிறந்த தலம்; இத்தலத்தின் சிறப்பு அளவிடற்கரியது.

பைரவர் - சீகாழி :

தருமையாதீனத்தின் அருளாட்சியில் திகழும் சீகாழி, மகாலிங்கப் பெருமானுக்குப் பைரவர் சந்நிதியாக உரியதிசையில் அமைகிறது. பிரமனால் பூசிக்கப்பெற்றது. பன்னிரு திருப்பெயர்

களையுடையது. திருஞானசம்பந்தர் அவதரித்து ஞானம்பெற்ற பெருந்தலம். நரசிம்ம மூர்த்தியைத் தம்முள் அடக்கம் செய்து கொண்ட சட்டநாதப் பெருமான் மலைக்கோயிலில் பைரவராக விளங்கியருளுகின்றார். சென்னை-மாயூரம் புகைவண்டிப்பாதையில் இத்தலம் அமைகிறது. சைவ-சமய வரலாற்றில் இத்தலத்திற்கு உயரிய இடம் உண்டு.

சோமாஸ்கந்தர் - (தியாகராசர்) – திருவாரூர் :

பிறக்க முத்திதரும் திருவாரூர், மகாலிங்கப்பெருமானுக்கு சோமாஸ்கந்த மூர்த்தமாக விளங்குவது. இச்சிவாலயத்தின் அதிகார மூர்த்தியாகத் திகழும் சோமாஸ்கந்த வடிவமே ஸ்ரீ தியாகராசர். மூர்த்தி தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புடையது இத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வாழ்வில் சிறப்பிடம் பெறுவது, மூவர் தேவாரப் பாடல்பெற்றது. தேரழகுக்குப் பெயர் சிறந்தது. மிகப் பெரியகோயில் திருமகள் பூசித்துப்பேறு பெற்றது இத்தலம். தஞ்சாவூர் – நாகப்பட்டினம் புகைவண்டிப் பாதையில் விளங்குவது.

தட்சிணாமூர்த்தி – ஆலங்குடி :

தஞ்சை–திருவாரூர்ப் புகைவண்டிப் பாதையில் நீடாமங்கலத்திற்கு வடமேற்கே நான்குகல் தூரத்தில் திருவிரும்பூளை என்ற பழைய பெயர்கொண்ட ஆலங்குடி விளங்குகின்றது. மகாலிங்கப்பெருமானுக்குத் தென்திசையில்உரிய தட்சிணாமூர்த்தி சந்நிதியாக இத்தலம் அமைகிறது. இங்குச் சிறப்பு விழா வெல்லாம் தென்முகப்பெருமானுக்கேயாகும். தேவர்களைக் காத்தருள இறைவன் ஆலகால நஞ்சுண்ட திருத்தலம் இது.

அம்மை - அர்த்தநாரீசுவரர் கோலம் :

அம்மைக்குரிய சந்நிதியாக ஏதும் இங்கு பேசப்படவில்லை. அருள்மிகு பெருநலமாமுலையம்மை ஐயனோடு இணைந்த அர்த்தநாரீசுர வடிவினளாகவே விளங்குகின்றாள் என்ற அரிய குறிப்பினைப் பட்டினத்துப் பிள்ளையார் பதினொராம் திருமுறையில் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் 38 முதல் 44 வரையுள்ள பாடல்களில் தொடர்ச்சியாகக் குறித்தருளும் அருமைப்பாடு உற்று நோக்கி உணரத்தக்கது. திருஇடைமருதூர் மும்மணிக்கோவையின் முதற்பாடல் 74 அடிகளில் ஆசிரியப்பாவாக நீண்டு அர்த்தநாரீசுவரத் திருவுருவினை பாதாதி கேசமாக வருணித்திருப்பதும் இதனை விளக்குகின்றது.

வழிபட்டு உய்வோம் :

இவ்வாறு திருஇடைமருதூர் மகாலிங்கப்பெருமானே சிவ மூர்த்தமாக அமையச் சோழநாட்டுத் திருக்கோயில்கள் பலவும் பொருத்தமுற ஏனைச் சுற்றுக்கோயில்களின் தன்மையொடு விளங்குவதால் சோழநாடே ஒரு சிவாலயமாதல் விளங்குகின்றது. முயன்றால் ஒரே நாளில் முறையாக இத்தலங்களைத் தரிசிக்க இயலும். இவ்வாறு அமைந்த சோழநாடாம் சிவன் கோயிலைத் தரிசித்து இம்மை மறுமைப் பேறுகள் பெற்று நாமெல்லாம் உய்யவேண்டுமென்ற பெருங்கருணையினால் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாக விளங்கும் மார்கழித் திங்களில் மேற்குறித்த சோழநாட்டுத் தலங்களை முறையாக நாள்தோறும் சென்று தரிசித்து ஆண்டுதோறும் வழிகாட்டி யருள்பாலித்து வருகிறார்கள். நாமும் சோழநாடாம் சிவன் கோயிலைத் தரிசித்துக் குருவருளும் திருவருளும் பெற்று உய்வோம்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

இன்றுகாலை ஒருமணிநேரத்திற்கும்மேலாகத் திருக்கோயில் வழிபாட்டினை என் குடும்பத்துடன் நிகழ்த்தினேன். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் நடைபெறும் இத்திருக்கோயில் தூய்மையுடனும் எழிலுடனும் எளிமையுடனும் காட்சியளிக்கின்றது. இத்திருக்கோயில் மேற்பார்வையாளர், அர்ச்சகர், அலுவலர் அனைவரும் அன்புடன் - ஆன்மீக நெறியுடன் எங்களை நெறிப்படுத்தினார்கள். தெய்வ அருள்பெற்ற ஒரு நிறைவு எங்களுக்கு ஏற்பட்டது. என் வணக்கமும் நன்றியும்.

(ஓ-ம்) சி. பாலசுப்பிரமணியன்,
தமிழ்ப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

30—12—76.

தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,
திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 35,36வது தலங்களாக விளங்குவன திருப்பந்தணை நல்லூர். திருக்கஞ்சனூர் ஆகியதலங்களாகும். தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் தாலூகாவில் குத்தாலம் ரயில்நிலையத்திலிருந்து வடக்கில் 10 கி. மீட்டர் தூரத்தில் உள்ளது பந்தணைநல்லூர். மாயூரத்திலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் குத்தாலத்திலிருந்தும் பஸ்வசதிகள் உள்ளன.

திருக்கஞ்சனூர், திருக்கோடிகாவுக்கு மேற்கிலும், திருவாவடுதுறைக்கு வடக்கிலும் உள்ளது. நரசிங்கன்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 2 கி. மீட்டர் தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். கும்பகோணத்திலிருந்தும் மாயூரத்திலிருந்தும் நேரே இத்தலத்திற்குப் போகப் பஸ் வசதிகள் உள்ளன.

திருப்பந்தணை நல்லூர்

தென்கயிலை, கோவூர், கொன்றைவனம் பானுபுரம் விஷ்ணுபுரம், இந்திரபுரி, கண்ணுவராச்சிரமம், வாலிநகர், அன்னமிடும் மெய்ப் பேரூர், கந்துகபுரி, ஆவூர் முதலியன இத்தலத்தின் மறுபெயர்களாகும்.

இறைவன் திருப்பெயர் ஸ்ரீ பசுபதீஸ்வரர். இறைவி திருப்பெயர் ஸ்ரீ வேணுபுஜாம்பிகை. (காம்பனதோளி) "காம்பேய்த்தோளி பற்றும் பாகத்தார்" என இவ்வூர்ப் பதிகத்தில் அப்பர் பெருமான் இப்பெயரை எடுத்தாளுதல் குறிப்பிடத்தக்கது. தலமரம் - சரக்கொன்றை. தீர்த்தம் சூரிய தீர்த்தம். கோயிலுக்கு எதிரே உள்ளது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் ஒன்றையும் திருநாவுக்கரசர் திருப்பதிகம் ஒன்றையும் பெற்று விளங்குவது.

ஒரு திருத்தம்

மலர் 36, இதழ் 2. பக்கம் 65. வரி 5 இல் சோழவள நாட்டில் பாடல்பெற்ற சிவதலங்கள் 274 என்பதை 190 - என்று வாசித்துக் கொள்க.

கோயிலமைப்பு:

கிழக்கு நோக்கிய சந்நிதி. அண்மையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற புதுப் பொலிவோடு கோயில் திகழ்கிறது. சந்நிதியில் சூரியபுஷ்கரணி தீர்த்தம். அதன் நடுவில் நீராழி மண்டபம். தல ஐதிகச் சுதைச் சிற்பங்களுடன் மண்டபம் விளங்குகிறது. எழுநிலைக் கோபுரத்தின் நுழைவாயிலில் கோட்டை முனியாண்டவர் குடியிருக்கிறார். பக்தர்கள் பலரது பிரார்த்தனைக்கு உரியவராய் விளங்கும் இவரைத் தரிசித்துக்கொண்டு உள்ளே செல்லலாம்.

கோயிலின் முகப்பில் மிகப் பெரிய மகா மண்டபம் அழகோடு திகழ்கிறது. மண்டபத்தில் அம்பாள் திருக்கோயில் வடக்கு நோக்கி விளங்குகிறது. வடக்கு நோக்கியிருந்து இறைவனை மணம்புரிந்துகொள்ளத் தவம் செய்கிறாள் அம்பிகை. வாயிலில் காளியும் ஐயனாரும் காவல் புரிகின்றனர். மண்டபத்தின்வடபுறம் நடராஜர்சபைஉள்ளது. கொடிமரமும் பலிபீடமும் உள்ளன. இரண்டாம் கட்டைக் கோபுர வாயிலில் தலத்திருப்பதிகங்கள் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுள்ளன. கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் கல்யாண மண்டபம் திகழ்கிறது. இறைவன் கல்யாண சுந்தரராக அருட்காட்சி தரும் சந்நிதியைத் தரிசிக்கலாம். உள் பிராகாரத்தில் அறுபத்து மூவர் திருவுருவங்கள் உள்ளன. தல விநாயகர் கோயில் தனியே உள்ளது. கர்ப்பக் கிருகக் கோஷ்டத்தில் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியை அடுத்து சட்டைநாதர் விளங்குகிறார். மேற்குப் பிராகாரத்தில் நவலிங்கங்கள், முருகன், கஜலக்ஷ்மி, அன்னபூர்ணி, கலைமகள் ஆகியமூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். வடக்குப் பிராகாரத்தில் தலமரம் சரக்கொன்றை உள்ளது. துர்க்கை சந்நிதியும் சண்டேசர் கோயிலும் உள்ளன. கிழக்கில் நடராஜமண்டபத்தை அடுத்து தல ஐதிகச் சிற்பங்கள் உள்ளன. நவக்கிரகங்கள் வக்ரமின்றி வரிசையாக உள்ளன.

வலம் வந்து அர்த்தமண்டபத்தைக் கடந்து ஸ்நான மண்டபத்தை அடைந்து கர்ப்பக்கிருகத்தை ஒட்டியுள்ள திருவணுக்கன் திருவாயிலில் நின்று இறைவனை மனமுருகி வழிபடலாம்.

இத்தல வரலாறு தேவஸ்தானத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது.

புராண வரலாறுகள் :

உலகத்தாயாகிய மலைமகளாம் பார்வதி பந்தாட விரும்பிப் பரமனை வேண்ட அவனும் நான்கு வேதங்களையும் பந்துகளாக்கி விளையாடக் கொடுத்தருளினன். விண்ணுலகில் தோழிகளுடன் மாலை வேளையில் பார்வதி பந்தாடினாள், விளையாட்டுக்கிடர்விளைக்க விரும்பாத ஞாயிறு புனலாடி மறையாது நீண்டபொழுது நிலைக்கலாயிற்று. அன்னைக்கு விண்ணப்பித்து உலக இயக்கத்துக்கு நேர்ந்த தடையைவிலக்கச்சென்றநாரதரையும் பின்பு நேரில்சென்ற அண்ணல் சிவபெருமானையும் அன்னையார் கவனிக்கவில்லை: விளையாட்டு உற்சாகம் போலும் எனஎண்ணியவராய் முகம் சிவந்த இறைவன் உருமாறிக் காலனை உதைத்த காலால் பந்தை எற்றி மண்ணுலகுக்கனுப்பிச் சென்றார். பந்தைக் காணாத அன்னையார் ஞானக்கண்ணை விழித்து நடந்தன யாவும் அறிந்து தெருண்டார்; ஆண்டவனிடம் சென்று வணங்கினார். எனினும், பண்பு தவறிய குற்றத்திற்காக சபிக்கப்பட்டார். பின் இறைவன் ஆணைப்படி உமை பசுவுருக்கொண்டுவர தமையனாகிய கேசவன் மாட்டிடையனாய்ப் பின்தொடர மண்ணுலகிற்போந்தனர், பந்து வீழ்ந்தணைந்த கொன்றைக்காட்டில் சரக்கொன்றை மரநிழலில் சுயம்புலிங்கமாய் இருந்த புற்றின்மேல் யாருமறியாமல் கேசவனுங்கூட அறியாதபடி பாலைச் சொரிந்து வழிபட்டுக் காட்டில் மேய்ந்து வாழ்ந்து வந்தார். கேசவனும் உறுதுணையாய் மாட்டிடையனாக அறச்சேரி கிராமக்காட்டில் ஓர் புறம் தவம் செய்து வந்த கண்ணுவமுனிவர் ஆச்சிரமத்தில் அடுத்துக் காலங் கழிக்கலாயினார்.

தன் பூசனைக்கு, பசு பால்கொடாத நிலையில் கண்ணுவ முனிவர் தன் ஆச்சிரம நிழலில் அண்டிவாழும் மாட்டிடையனும் கேசவனை உசாவ, கேசவனும் பின்பு பசுவைக்கவனிக்கலானான். ஒருநாள் கொன்றைக்காட்டிலே சுயம்புலிங்கத்தின் மேல் பால்சொரியும் தன் பசுவைக்கண்ட கேசவன் கோலால் அடிக்க, அதுவும் துள்ளிப் புற்றை மிதித்தது; அன்னை தன்னுருக்கொண்டாள். பாம்பணைப் பெருமான் பந்தணைந்த காட்டில் மாட்டிடையன் உரு நீங்கி, ஆதிகேசவனாகி அரவமணிந்தோன் மருங்கில் கோயில்கொண்டார். புற்றின் முடியில், விண்ணினின்று வீழ்ந்த பந்தணைந்த சுவடும் பசுமிதித்தாக்கிய குளம்படிச் சுவடும் இன்றும் நமக்குக் காட்சி அளிக்கின்றன.

பின்னர் ஆரழல் ஏந்திய அத்தனைக் காதலித்திடும் நம் அன்னை வடக்குநோக்கியமர்ந்து கைலாயநாதனை நோக்கித் தவங்கிடக்க, அவரும் அவளை ஏற்றுக்கொண்டார். கண்ணுவ முனிவரும் மற்றையோரும் கண்டு தரிசிக்கத் தேவியைத் திருமணம் செய்து கொண்டு, பசுபதி என்னும் திருநாமத்தோடு இறைவன் இத்தலத்தே எழுந்தருளியிருக்கின்றார்.

ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், கண்ணுவர், வாலி, இந்திரன், பிரமன், சூரியன் முதலியோர் இத்தலத்து இறைவரைப் பூசித்து இஷ்டசித்தி பெற்றிருக்கின்றனர்.

காம்பிலி நாட்டரசன் பூபதி சூடாமணியின் மைந்தன் பிறவிக்குருடாயிருந்தான். பல தலங்களிலும் அவனை வழிபடச் செய்தான். குருடு நீங்கப்பெருமையால், இத்தலத்து வந்து மண்ணி நதியில் நீராட்டுவித்து அப்பனையும், அம்மையையும் தரிசனம் செய்துவைக்கக் குருடு நீங்கியது. மகனுக்குப் 'பசுபதி' என்று பெயரிட்டான். சில காலம் இத்தலத்திலேயே தங்கியிருந்தான். பின்பு கடவுளருளால் தோன்றிய மலர்முடியைக் கண்ணுவரால் சூட்டப் பெற்றுத் தன் தேசத்துக்குத் திரும்பிவந்து மாமுனிவன் கட்டளைப்படி ஆலயத் திருப்பணிகளை முதன் முதல் செய்து நிறைவேற்றி வீடுபேற்றைப்பெற்றான்.

சையகிரி நாட்டின் அன்னபுரத்து மிருத்துஞ்சயன் என்னும் மறையவன் பசுவைக் கொன்ற பாவத்தால் குட்டரோகமடைந்தான். பல தலங்களில் வழிபட்டும் அது தீராது, இவண் வந்து வழிபட்டு அப்பெருநோய் நீங்கிப் பெருவாழ்வெய்தினன்.

காம்போச தேச மன்னன் காந்தன் என்பவன் ஆலயத்தின் எதிரிலுள்ள சூரிய தீர்த்தத்தில் முழுகி, ஒரு மண்டலம் தங்கி, இறைவனைப் பூசித்துத் தன் நோய் நீங்கப்பெற்றான்.

வித்யாவதி என்ற விலைமகள், இச்சூரிய தீர்த்தத்தில் மூழ்கி, ஆண்டவனை வழிபட்டுப் பாவம் நீங்கப்பெற்றுப் பேரின்ப விடெய்தினள்.

துளுவ தேச மன்னன் வீரதுரந்தரன் இத்தலத்தில் வந்து வழிபட்டு மக்கட்பேறெய்தினன்.

காட்டில் ஆண்டவன் புற்றுருவினனாக விளங்கினான். விண்ணகத்துப் பந்தும் மண்ணகத்துப் புற்றின்மீது விழ்ந்தது. அன்று புற்றின்மீது கோயிலில்லை. காம்பிலி அரசன் கோயில் கட்டினான். பின்பு கோயிலைப் பெரிதாக்கிக் கருங்கல்லால் கட்டியதும் விண்ணளாவிய கோபுரங்களையும், கோட்டையையும், ஆழ்ந்த அகழிகளையும் மாடமாளிகைச் சின்னங்களையும், பொறியெறியும் கற்குண்டுகளையும் படைத்தவர்கள், திக்கெட்டிலும் புகழ் படைத்த சோழர்களே என்றால் சிந்தையெல்லாம், தோள்களெல்லாம் பூரிப்பால் விம்முமன்றோ! ஆராய்ச்சியாளர்க்குப் பந்தணைக் கோட்டையிலே ஒரு பெரு விருந்து உண்டு.

"ஆர்க்கிமிடீஸ் என்பவர் சைரக்யூசில் உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பலவகை எந்திரங்களைக் கண்டு பிடித்தார். அவையெல்லாம் "யவனப்பொறிகள்" என்ற பெயரோடு தமிழ் நாட்டுக் கோட்டைகளில் இடம்பெற்று விளங்கின" என்று திரு. தெ. பொ. மீ. அவர்கள் கூறுகின்றனர். மண்ணுக்கடியில் பந்தணைக்கோட்டையில் ஆயிரக் கணக்கில் அடுக்கடுக்காய்ப் புதைந்து கிடக்கும் கற்குண்டுகள் சுமார் 9 ரகங்களும் இங்கு வைக்கப்பட்ட சோழர் காலத்து யவனப் பொறிகள் எறிவதற்காகச் சேகரித்த குண்டுகளோ? என்று எண்ணுகின்றனர்.

கல்வெட்டு வரலாறு :

இவ்வூர்ச் சிவன் கோயிலில் சோழமன்னர்களில், முதலாம் இராசராசசோழன், விக்கிரமசோழன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங்குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் இவர்கள் காலங்களிலும், விசயநகர வேந்தர்களின் காலங்களிலும், பொறிக்கப்பெற்றகல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளன்றி, காலிங்கராயன் மீது பாடப்பெற்ற பாடல்களும் இருக்கின்றன. இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் பசுபதிதேவர், பசுபதீஸ்வரர் என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனிகள் :

பரகேசரிவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராசதேவர் காலத்துக் கல்வெட்டில் விக்கிரம சோழீச்சரமுடையாரையும், குலோத்துங்க சோழீச்சுரமுடையாரையும் எழுந்தருளுவிக்கப்பெற்ற செய்திகள் கூறப்

பெற்றுள்ளன. இவ்விரு திருமேனிகளும் இக்காலம் முதற் பிராகாரத்துக் கொன்றை மரத்தடியிலும் இரண்டாம் பிராகாரத்தில் இரண்டாம் கோபுரத்துத் தென்பாலுள்ள செங்கற்கோயிலிலும் எழுந்தருளியிருப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு :

முதலாம் இராசராசன் கல்வெட்டில் இவ்வூர் பந்தணை நல்லூர் என்றே குறிக்கப்பெற்றுள்ளது. விக்கிரம சோழனது ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டில் இவ்வூர் வடகரை விருதராச பயங்கர வளநாட்டு விளத்தூர் நாட்டுப்பந்தணை நல்லூர் என்று குறிக்கப்பெற்றுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனாரால் நாட்டுத் தொகையில் விளத்தூர் நாட்டு விளத்தூர் என்று கூறப்பெற்றுள்ளது. இது இப்பந்தணை நல்லூருக்குப் பக்கத்தில் இருத்தல் வேண்டும்.

இராசராச நாடகம் :

முதலாம் இராசரான் காலத்தில் இக்கோயிலில் நட்டுவப்பங்கு மெய்மட்டிப்பங்கு இவைகளை உடையவனாய் இருந்தவன் ஹாஸியன் விக்கிரமாதித்தன் அச்சனான இராஜராஜநாடகப்பெரியன் ஆவன். இவனுக்கு இராசராச நாடகப்பெரியன் என்பது பட்டப்பெயராகும். இப்பட்டம் இராஜராஜ நாடகத்தில் இவனுக்கு இருந்த பெரும் புலமையை விளக்குவதாகும். இந்நூல் இதுபொழுது கிடைத்திலது.

கோயில் பொருளைத் திருடியவர் தண்டிக்கப்பட்ட விதம் :

இவ்வூர்ப் பசுபதீச்சுவரருக்குத் திருவாபரணம் செய்யக் கொடுத்து இத்தேவர் பண்டாரத்தில் ஒடுக்கியிருந்த பொன்னிலே சிறிது பொன்னை இக்கோயிற் சிவப்பிராணர் சிலர் கூறிட்டுக்கொண்ட குற்றத்திற்காக, இச்சிவப் பிராமணரும் இவர்கள் வம்சத்தாரும் இக்கோயிலிலும் இக் கோயிலில் எழுந்தருளுவித்த விக்கிரம சோழீச்சரமுடையார் கோயிலிலும் புகுதல் கூடாதென்றும், இவர்கள் கூறிட்டுக் கொண்ட குற்றத்திற்காக நூற்றெண்பது காசை இக் கோயில் திருப்பணிக்கு உடலாக ஒடுக்க வேண்டுமென்றும் அரசன் ஆணையிட்டுள்ளான். இது நிகழ்ந்தது, “பூ மருவிய பொழிலேழும் பொருப்பேழும் புனைந்தருளி” எனத்

தொடங்கும் மெய்கீர்த்தியையுடைய பரகேசரி வர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவரின் ஆறும் ஆண்டு ஐம்பத்தைந்தாம் நாளாகும்.

கல்வெட்டுக்களைப் பாதுகாத்த விதம்:

'பழங்கல்வெட்டிற் கண்டபடி' என்று முதலில் எழுதப் பெற்று, அதன்கீழ் ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேஸரிவர்மற்கு யாண்டு ம (10) பந்தணைநல்லூர்ப் பசுபதி தேவற்கு" என இக்கோயில் அர்த்த மண்டபத்தின் தென்புறத்தில் ஒரு கல்வெட்டுத் தொடங்குகிறது. இதனால் கோயிலைப் புதுப்பிக்குங்காலை அதில் கல்வெட்டு இருந்தால் அதை அவ்வாறே புதுப்பித்த கோயிலில் செதுக்கி வைப்பது பண்டைய வழக்கமென்று தெரிகின்றது.

காலிங்கன் எல்லனைப்பற்றிய கல்வெட்டுப் பாடல்கள் :

இப்பாடல்கள் முதற்கோபுரத்து வாசலின் வடபால் சுவரில் இருக்கின்றன. இவைகள் காலிங்கனது புகழைப் பற்றிக் கூறுகின்றன. இவன் தமிழில் மிக்க அன்புடையவன் என்றும், கொடையில் பாரியிலும் மேம்பட்டவன் என்றும், பலவாறாகப் பேசப்படுகின்றான். இக்கல்வெட்டுக்களின் எழுத்துக்களை நோக்கின் இவன் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவனாதல் வேண்டும். இப்பாடல்களில் ஒன்று பின்வருமாறு :-

" நாலங்க வாளிபெற்றார் நாரியரே பாரியினும்
மேலங்க மான கொடைவேளான் - காலிங்கன்
எல்லனுக் கேபெறுமோ விந்திர நீ லங்கருப்பு
வில்லன்கைக் கேபெறுமோ மீன் "

See the Annual report on South Indian Epigraphy for the year 1931 Nos. 69-74. 1932 Numbers 115, 120.

திருக்கஞ்சனூர்

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்துக்குச் சொந்தமானது இத்தலம்.

திருக்கஞ்சனூர், பலாசவனம், பராசரபுரம், பிரமபுரி, அக்னித்தலம், கம்சபுரம் முத்திக்ஷேத்திரம், ஹரதத்தர் அவதாரத்தலம் எனப் பல பெயர்களை உடையது.

இறைவன் திருப்பெயர் ஸ்ரீ அக்னீஸ்வரர் ; இறைவி திருப்பெயர் ஸ்ரீ கற்பகாம்பிகை ; தலமரம் பலாசமரம்.

இத்தலத்தில் பராசர தீர்த்தம், பிரமதீர்த்தம் (காவிரி), அக்னிதீர்த்தம், கம்சதீர்த்தம், சந்திர தீர்த்தம், ஆஞ்சனேய தீர்த்தம், மணிகர்ணிகாகட்டம் எனப் பல தீர்த்தங்கள் உள்ளன.

தலப்பெருமை :

இத்தலத்தில் பராசரருக்குச் சித்தப்பிரமை நீங்கியது. பிரமதேவருக்குத் திருமணக் கோலக் காட்சி கிடைத்தது. அக்னிக்குப் பாண்டு நோய் தவிர்ந்தது. கம்சனுக்கு மூத்திர கிருத்சர நோய் நீங்கியது மாண்டவ்ய புத்திரர்களுக்கு மாத்ருகத்தி தோஷம் நீங்கியது சந்திரன் சாபம் நீங்கியது விருத்தகாளகண்டன், சித்திரசேனன், மார்க்கண்டேயர், அசைக்காய் முனிவர் முதலியோர் அருள்பெற்றது போன்ற நிகழ்ச்சிகள் இத்தலத்திற்குரிய பெருமைகளாகும்.

கோயிலமைப்பு :

கிழக்குநோக்கியசந்நிதி. தெற்குவாயிலில் ஐந்துநிலைக் கோபுரம் கோயிலுக்கு அழகுதருகிறது. அண்மையில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற தலம் சுவாமியின் வலப் பாகத்தில் அம்பாள் கோயில் கொண்டு திருமணக்காட்சி வழங்கும் நிலையில் உள்ளார். சுவாமி அம்பாள் சந்நிதிகள் கிழக்கு நோக்கியுள்ளன. சுவாமி அம்பாள் இரண்டு கோயில்களையும் இணைக்கும் பெரிய பிராகாரத்துடன் சுவாமி அம்பாள் கோயில்களில் தனித்தனி உட்பிராகாரங் களும் உள்ளன.

சுவாமி கோயிலின் வாயிலில் துவஜஸ்தம்பமும் நந்தி பலிபீடங்களைக் கடந்து உள்ளே செல்லும்போது நடராஜர் சபையும் காட்சிதருகின்றன.

2ஆம் கோபுரத்தைக்கடந்துஉள்ளேசென்றால் நால்வர் சந்நிதியைத் தரிசித்துச் சுவாமி சந்நிதியை அடையலாம். பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளிய சபையை வணங்கி வலம் வரும்போது நர்த்தனவிநாயகர், ஹரதத்தருக்கு அருள் செய்யும் தக்ஷிணாமூர்த்தி, முருகன் முதலிய மூர்த்திகளைத் தரிசிக்கலாம். வடக்கு உட்பிராகாரத்தில் புரசு என்ற தல மரம் உள்ளது. துர்க்கை சண்டேசர் சந்நிதிகள் உள்ளன.

கிழக்கில் நடராசர் கற்சிலை உருவத்தில் விளங்கும் சபை காட்சி தருகிறது. தல ஐதிகச் சிற்பங்கள் பல உள்ளன.

சுவாமி சந்நிதியில் ஹரதத்தரின் உருவச் சிலையோடு அவரிடம் வயோதிகப் பிராமணர் வடிவில் பிக்ஷைகேட்டு வந்த இறைவன் திருவுருவமும் அமைந்து விளங்குகிறது.

சுவாமி சந்நிதி நம் நெஞ்சினை ஈர்க்கும் அருட் பொலிவோடு திகழ்கிறது.

அம்பாள்கோயில் வாயிலில் ஆதிகற்பகாம்பாள் திரு உருவச்சிலை உள்ளது. தனித் திருச்சுற்ருேடு அம்பாள் கோயில் திகழ்கிறது.

பராசர முனிவரின் மனமயக்கு நீங்கியது :

பராசர முனிவர் ஓடம் செலுத்தும் செம்படப் பெண்ணை மணந்த காரணத்தினுல் சித்தங்கலங்கி மனத்தெளிவிற்குத் தலயாத்திரை செய்தார். இத்தலத்தை அடைந்தபோது அவருக்கு மனத்தெளிவு உண்டாயிற்று. தன்பெயரால் தீர்த்தம் ஒன்று உண்டாக்கி அதில் நீராடி இறைவன் திருவருளைப் பெற்ருர்.

மாண்டவ்யர் மோக்ஷம் பெற்றது :

மாண்டவ்யர் என்ற அந்தணருக்கு ஆறு புதல்வர்கள் இருந்தனர். தாயைக் காப்பாற்ருத குற்றத்தால் பாவம் அவர்களைத்தொடர்ந்தது. கௌதமர் உபதேசப்படி திருக் கஞ்சனூர் முதலிய ஆறுதலங்களிலும் இறைவனை வழிபட்டுக் குற்றம் நீங்கினர்.

பிரமதேவர் திருமணக் கோலம் கண்டது :

திருமணக் கோலத்தைக் காண விரும்பிய பிரம தேவரைக் கஞ்சனூர் வருமாறு செய்து இத்தலத்தில் பிரமனுக்குத் திருமணக்கோலம் காட்டியருளினுன் இறைவன்.

அக்னி பாண்டு நோய் நீங்கியது :

அளவுக்குமேல் நெய் அவிஉண்டபடியால் அக்னிதேவ ருக்கு விக்கல் நோயும் பாண்டுநோயும் ஏற்பட்டன. வியாச முனிவர் கட்டளைப்படி அக்னிதேவன் இத்தலத்தை

அடைந்து இறைவனை வழிபட்டு பாண்டுநோய் நீங்கப் பெற்ருன். அக்னிக்கு வரமளித்ததால்தான் சுவாமி ஸ்ரீ அக்னீஸ்வரர் எனப்படுகிருர்.

கம்சன் பூஜித்தது :

மதுராபுரி மன்னன் உக்ரசேனனுக்குக் கம்சன் என்ெருரு புதல்வன். அவன் இளமைக் காலத்தில் பிறன்மனை நயந்த குற்றத்திஞல் மூத்திர கிருத்சரம் என்னும் நோய்க்கு இலக்காஞன். சுக்ராசாரியார் கட்டளைப்படி இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டு நோய் நீக்கம் பெற்ருன். அவன் பெயராலேயே இத்தலம் கம்சபுரம் என அழைக்கப் படுகிறது.

சுரைக்காய் முனிவர் வழிபட்டது:

சுரைக்குடையான் குலத்தில் தோன்றிய வேளாளர் ஒருவர் இத்தலத்தில் வாழ்ந்து வந்தார். தன் வீட்டில் காய்த்த சுரைக்காயைச் சுவாமிக்கு அர்ப்பணம் செய்யும் நியமம் உடையவர் இவர். இறைவனே சிவனடியாராக இத்தலத்திற்கு எழுந்தருளி வந்து இவரளித்த கறியமு துண்டு இவ்வேளாளர்தம்குடும்பத்திற்குவீடுபேறளித்தார்.

ஹரதத்தர் சரித்திரம்:

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் கஞ்சனூரில் வாசு தேவர் என்ற வைணவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்குச் சுதர்சனர் என்ெருரு ஆண் பிள்ளை பிறந்தது. சுதர் சனர் இளமை முதல் சிவபக்தராக விளங்கிவந்தார். விபூதி உருத்திராக்கங்கள் தரித்து சிவனடியாராக விளங்கிஞர் சுதர்சனர். தந்தை எத்தனை தடுத்தும் மகன் கேட்கவில்லை. அவ்வூர் மக்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்பு முக்காலியின் மேலமர்ந்து சிவமே பரம்பொருள் என்று கூறிஞல் எல்லோ ரும் ஒத்துக்கொள்வதாக நிபந்தனை விதிக்க அவ்வாறே நெருப்பிற் பழுத்த இரும்பு முக்காலியிலமர்ந்து சிவனே பரம் பொருள் என மும்முறை கூறி யாதொரு இடையூறுமின்றி இறங்கிஞர் சுதர்சனர். இக்காட்சியைச் சித்தரிக்கும் திரு வுருவம் கஞ்சனூர்வரதராஜப்பெருமாள்கோயிலிலும் அக்னீ சுவரர்கோயில்நடராஜர் சந்நிதியிலும் உள்ளது. பெருமாள் கோயிலிலும் ஸ்ரீ அக்னீசுவரரும் ஸ்ரீ கற்பகாம்பிகையும் உள்ளனர். ஹரதத்தருக்கு உபதேசித்த தக்ஷிணமூர்த்தி

திருவுருவில் ஹரதத்தர் திருவுருவமும் உள்ளது. இவர்தான் சுதர்சனரை ஆட்கொண்டு ஹரதத்தர் என்ற சிவநாமதீக்ஷை செய்தவர்.

ஒரு செல்வந்தர் அக்னீசுவரருக்குத் தினமும் நைவேத்யம் படைப்பது வழக்கம், சுவாமி அதை உண்பதுபோலக் கனவு காண்பார் அவர். ஒருநாள் அவர்படைத்த உணவை சுவாமி ஏற்றுக்கொள்ளவில்லை,

அக்னீசுவரர் ஒரு ஏழைப் பிராமணர் வடிவத்தோடு சென்று ஹரதத்தரிடம் கஞ்சியை வாங்கி உண்டார். அதை அருந்திய ஈசனுக்கு வயிறு நிரம்பியிருந்தது. அதனால் செல்வர் அளித்த உணவு ஈசனுக்கு ஏற்கவில்லை. இதை அறிந்த அச்செல்வந்தர் ஹரதத்தரின் பெருமையை அறிந்து அவரிடம் சென்று பணிந்து வாழ்த்துவதாகக் கூறப்படுகிறது. ஆலயத்தில் ஹரதத்தரின் குடும்பமும் ஏழைப் பிராமணராக வந்த ஈசனின் திருவுருவமும் உள்ளன. ஹரதத்தருக்குத் தனிகோயிலும் இங்குள்ளது.

* கல்வெட்டு வரலாறு :

இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் விக்கிரம சோழதேவன், இராசகேசரிவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவன் திருபுவனச் சக்கரவர்த்தி வீரராஜேந்திரதேவன் இவர்கள் காலங்களிலும் விஜய நகரமன்னரில் கிருஷ்ணராய மகாராயர் காலத்திலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருஅக்நீஸ்வரம் உடையார் என்னும் பெயரால் குறிக்கப்பெற்றுள்ளார். இக்கோயிலில் விழாக்காலங்களில் எழுந்தருளும் கற்பகப்பிள்ளையை எழுந்தருளுவித்தவர்பாஸ்கரபட்டர் மகன், கனகசபைப் பட்டர் ஆவர். இதை இவர் எழுந்தருளுவித்தது சகம் 1447 அதாவது கி. பி 1525 ஆகும். இவ்வூரில் விக்கிரமசோழன் கல்வெட்டு ஐந்நூற்று எண்மன் மடத்தைக் குறிப்பிடுகிறது. இவ்வூர் விருதராச பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டுக்கு உட்பட்டிருந்தது.

---

* See the Annual report on South Indian Epigraphy for the year 1931 Nos. 59 — 67.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனத்திற்குச் சொந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்
வைத்தீஸ்வரன்கோயில்

வினைதீர்த்தான்கோயில் விளக்கீடு அறக்கட்டளை வேண்டுகோள்

திருச்சிற்றம்பலம்

" விளக்கினூர் பெற்ற இன்பம் மெழுக்கினுல் பதிற்றியாகும்
துளக்கின் நன்மலர் தொடுத்தால் தூய விண்ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்ஞர்க்கு அடிகள் தாம் அருளுமாறே. "

திருச்சிற்றம்பலம் — அப்பர்.

விளக்கின் விளக்கம்:

இறைவன் ஒளிமயமானவன். அறிவு ஒளிமயமானது. அறிவை வடமொழியில் ஞானம் என்பர். ஞானம் உடையவர்களே ஞானிகள் எனப்படுவர். எனவேதான், ஞானிகள் உள்ளத்தில் இறைவன் வீற்றிருக்கிருன் என வேத ஆகம தேவாரத் திருமுறைகள் அருளிச் செய்கின்றன. ஞானிகள் உள்ளத்தில் எழுந்தருளியிருப்பதுபோல், நம் உள்ளத்திலும் இறைவன் வீற்றிருந்தருள வேண்டுமாஞல், நாமும் மெய்யறிவு பெற்றுத் திகழவேண்டும். விளக்கு, புற இருளைப் போக்கி விளக்கம் தரும். ஞானம் நம்முள்ளத்தில் உள்ள அக இருளைப்போக்கி விளக்கம் தரும். இறைவன் சந்நிதியில் இருளை அகற்றும் விளக்கேற்றிஞல் நம் உள்ளத்தில் அறியாமை என்னும் இருளகன்று தெளிவு-விளக்கம் பெறுவதோடு, நமது குடும்பமும், சமுதாயமும், நாடும் விளக்கம்பெறும். இத்திருவிளக்கேற்றும் பணியில் ஈடுபடுவோரை எல்லாச் செல்வங்களும் நாடிவரும். இதஞல்தான் அப்பரடிகள் 'விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்' என்று அருளிச்செய்தார். இதன் பொருள், விளக்கிடுவார்க்குப் பயன் மெய்ந்நெறியை அடையத்தக்க ஞானம் கைகூடும் என்பதாகும்.

வேளூர்ச் சிறப்பு:

புள்ளிருக்குவேளூர் புகழ்பெற்ற சிவத்தலம். புள் - ஜடாயு. இருக்கு - வேதம், வேள் - முருகப்பெருமான், ஊர் - ஊர்ந்து

செல்லும் சூரியன் ஆகியோர் பூசித்துப் பேறுபெற்றதால் இப்பெயர் பெற்றது இத்தலம். பல்லாயிரம் குடும்பங்களுக்குக் குலதெய்வமாக விளங்கும் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் இத்தலத்தில் எழுந்தருளி அருள் வழங்குகின்றார். மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத பிறவி நோயாகிய உயிர்ப் பிணிக்கு மட்டுமின்றி, உடற்பிணிக்கும் மருந்தருள்பவர் இவர். எல்லா உயிர்களுக்கும் அன்னையாக நின்று அருள்பாலிக்கிருள் அம்மை ஸ்ரீ தையல்நாயகி. கலியுகத்திலும் கண்கண்ட தெய்வமாக நின்று கருணை புரிகிறார் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமான். இத்தலம் செவ்வாய் எனப்பெறும் அங்காரக க்ஷேத்திரம். சித்த மருத்துவத் துறையில் சிறந்த பதினெண் சித்தர்களில் ஒருவராகிய தன்வந்திரி இத்தலத்து இறைவனை வழிபட்டு முத்திப்பேறுபெற்றார்.

வினைதீர்த்தான்கோயில் விளக்கழகு :

"திருவாரூர்த் தேரழகு." "திருவிடைமருதூர்த் தெருவழகு," "வினைதீர்த்தான்கோயில் விளக்கழகு" என்பன பன்னெடுங் காலமாக வழங்கிவரும் பழமொழிகளாகும். விளக்கழகிற்குப் பெயர் பெற்ற வைத்தீஸ்வரன்கோயிலில் விளக்கிடும் நல்லறப்பணி, காலமாறுபாட்டாலும், அரசியல் சட்ட திட்டங்களாலும் நில வருவாய் குறைந்து இதுவரை நடைபெற்றது போல விளக்கேற்றும்பணி தொடர்ந்து நடைபெற இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது. இந்நிலை நீடிக்குமானால் வீடும் நாடும் விளக்கம் குன்றும். ஆதலால், விளக்கிடும் இந்நல்லறப்பணி தடையில்லாமல் நடைபெற வேண்டுமென்ற பக்தர்கள் பலரது வேண்டுகோளுக்கு இணங்க, தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவிளக்கு அறக்கட்டளை ஒன்றினை நிறுவத் திருவுளம் பற்றினார்கள். அதன்படி நள தைத்திங்கள் 16 ஆம் நாள் (29-1-77) சனிக்கிழமையன்று நிகழ்ந்த கிருத்திகை விழாவில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியின் முன்னிலையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இவ்விளக்கீடு அறக்கட்டளையைத் தொடங்கி வைத்து ரூபாய் ஓராயிரத்தொன்றை (ரூ. 1001 - 00) வழங்கியருளினார்கள். முன்னறிவிப்பில்லாமல் தொடங்கப்பெற்ற இப்பணியில் பத்து அன்பர்களுக்கு மேல் சேர்ந்து தொகை அளித்து, பெயர்ப்பதிவு செய்து கொண்டார்கள்.

அறக்கட்டளை அமைப்பு :

ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானைக் குலதெய்வமாகக் கொண்டு அப்பெருமான் திருவருளால் நோயும், துன்பமும் நீங்கி

நலம் பெற்றோர் இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஏராளமானவர்கள் உள்ளனர். 'வினைதீர்த்தான்கோயில் விளக்கழகு' என்னும் பெயர் என்றும் நிலவும் வண்ணம் அன்பர்கள் இத்திருவிளக்குஏற்றும் திருப்பணியில் பங்கேற்கும்வண்ணம் இவ்வறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது அன்பர்கள் தங்கள் பிறந்த நாள், திருமண நாள் அல்லது முன்னோர்களின் நினைவு நாள் (சிரார்த்த நாள்) போன்றவற்றுள் அவர்கள் விரும்பும் ஏதேனும் ஒரு நாளில் இத்திருக்கோயிலில் எல்லாச் சந்நிதிகளிலும் விளக்கிடுமாறு இவ்வறக்கட்டளையினை அமைத்துக்கொள்ளலாம். இவ்வறக்கட்டளைக்கு, திருவிளக்கு ஏற்றும் பொருட்டு ஓராயிரம் (ரூ. 1000) நிதி உதவி செய்யலாம். இத்தொகையினை வைப்பு நிதியாகக்கொண்டு, அதில் வரும் வட்டி வருவாயில் ஆண்டுதோறும் அவர்கள் குறிப்பிடுகின்ற ஒரு நாளில் விளக்கீடும் அர்ச்சனையும் செய்வித்து. பிரசாதம் அனுப்பிவைக்கப்பெறும். அன்பர்கள் 'வினைதீர்த்தான்கோயில் விளக்கழகு' என்ற பெயர் மாறாது நிலைபெறவும், தாங்கள் மெய்ந்நெறியை அடையத்தக்க ஞானத்தைப் பெற்றுச்சிறக்கவும், வீடும் நாடும் விளக்கம்பெறவும் இவ்விளக்கீட்டுப் பணியில் பங்குபற்றிப் பயன்பெறுவார்களாக.

வேண்டுகோள் :

ஒன்றை மற்றொன்றாகப் பிறழஉணரும் அறிவு பொய்யறிவு, இது உலகியல் அறிவாகும். உள்ளதை உள்ளபடியே உணரும் அறிவே மெய்யறிவு எனப்படும். பொய் - மாறுபடுவது மெய் மாறுபடாதது; நிலையானது. எனவே தான் விளக்கிடுவோர்க்கு இம் மெய்யறிவு கைகூடும் என விளக்கினர் அப்பர் பெருமான். இப்பயன் மிகு நல்லறப்பணிக்கு முதலீட்டு நிதியாக அன்பர்கள் (ரூ. 1000 – 00) ரூபாய் ஓராயிரத்தினையும் பொருளாளர் வேளூர் தேவஸ்தானம் வைத்தீஸ்வரன்கோயில் என்ற முகவரியில் நேர் முகமாகவோ அஞ்சல் வழியாகவோ செலுத்தி அதற்குரிய இரசீது பெற்றுக்கொள்வார்களாக. குலமும் குடியும் விளக்கம் பெறுவார்களாக. வீடும் நாடும் விளக்கம்பெறச்செய்வார்களாக.

> "இல்லக விளக்கது இருள்கெடுப்பது
> சொல்லக விளக்கது சோதியுள்ளது
> பல்லக விளக்கது பலருங் காண்பது
> நல்லக விளக்கது நமச்சிவாயவே" —அப்பர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி;

வேளூர் தேவஸ்தானம்,
வைத்தீஸ்வரன்கோயில்.
22—1—1977.

வித்துவான். இராமலிங்கத்தம்பிரான்,
கட்டளை விசாரணை.

தொகை அனுப்பவேண்டிய முகவரி :

பொருளாளர்,
வேளூர் தேவஸ்தானம்,
வைத்தீஸ்வரன்கோயில் (அஞ்சல்)
சீகாழி வட்டம், தஞ்சாவூர்மாவட்டம். Pin. 609117

செய்திகள்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

மார்கழி மாதச் சிறப்பு வழிபாடு

மார்கழி மாதம் பீடுடைய மாதம். மக்களின் ஓராண்டுக்காலம் தேவர்களுக்கு ஒருநாள். மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற் காலம். ஆதலால் ஆதீனத் திருக்கோயில்களில் இம்மாதத்தில் விடியற்காலையில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. இம்மாதம் முழுவதும் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டுத் தொடங்கும் காரியங்கள் எல்லாம் இவ்வாண்டு முழுவதும் நன்மையாகவே நிறைவேறும் என்பது ஆன்றோர் களின் எண்ணமாகும்.

மார்கழி மாதத்தில் திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத் திருக்கோயில்களில் எல்லாம் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு சிறப்பாகச் செய்யப்பெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் விடியற் காலையில் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி வழிபாடாக விசேஷ அபிஷேக ஆராதனைகளைச் செய்து வழிபட்டு, ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ துர்க்கா தேவி திருக்கோயில்களிலும் வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். பின்னர் ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிற கோயில்களுக்கும் எழுந்தருளி உலக நலங்கருதி வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந் தருளும் திருக்கோயில்களில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி அர்ச்சனைகள் செய்வித்து வழிபாடாற்றினார்கள். அபிஷேக காலத்தில் அவ்வத்தலத் திருப்பதிகங்கள் ஓதுவாமூர்த்திகளால் பாராயணம் செய்யப் பெற்றன.

16—12—76, 23—12—76 இவ்விரு நாட்களிலும் மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீஞானம்பிகை உடனுய ஸ்ரீவதான்யேஸ்வர சுவாமி திருக்கோயில், 17—12—76 அன்று திருக்கடவூர்

ஸ்ரீ அபிராமி அம்மை உடனுறை ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில், 18—12—76ல் மாயூரம் ஸ்ரீ விசாலாட்சி அம்மை உடனுறை ஸ்ரீ காசிவிசுவநாதர் திருக்கோயில், 19—12—76ல் மணக்குடி ஸ்ரீ சௌந்தர நாயகி உடனுறை ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில், கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் உடனுறை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயில், 20—12—76ல் திருநின்றியூர் ஸ்ரீ உலகநாயகி உடனுறை ஸ்ரீ லட்சுமி புரீசுவரசுவாமி திருக்கோயில், 21, 28—12—76, 1—1—77 வேளூர் ஸ்ரீ தையல்நாயகி உடனுறை ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில், 22—12—76ல் பேரளம் ஸ்ரீ பவானிஅம்மை உடனுறை ஸ்ரீ சுயம்புநாதசுவாமி திருக்கோயில், 24—12—76ல் சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோயில், 25—12—76ல் திருநள்ளாறு ஸ்ரீ போகமார்த்த பூண்முலை அம்மை உடனுறை ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமிதிருக்கோயில், காரைக்கால்தருமபுரம் ஸ்ரீ மதுரமின்னம்மை உடனுறை ஸ்ரீ யாழ்மூரிநாத சுவாமி திருக்கோயில், 26—12—76ல் குத்தாலம் ஸ்ரீமிருதுமுகிழாம்பிகை உடனுறை ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி திருக்கோயில், 27-12-76ல் மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், 29—12—76ல் விளநகர் ஸ்ரீ தோழியம்மை உடனுறை ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி திருக்கோயில் 30—12—76ல் திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில் 31—12—76ல் குறுக்கை ஸ்ரீ ஞானம்பிகை உடனுறை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி திருக்கோயில் 2—1—77ல் திருப்பறியலூர் ஸ்ரீ இளங்கொம்பனையாள் உடனுறை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில் திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி உடனுறை ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி திருக்கோயில், 3—1—77ல் திருமுல்லைவாயில் ஸ்ரீ கோதையம்மை உடனுறை ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி திருக்கோயில், 5—1—77ல் ஆச்சாள்புரம் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை உடனுறை ஸ்ரீசிவலோகத்தியாகராஜசுவாமிதிருக்கோயில், 8-1-77ல் தலைஞாயிறு ஸ்ரீ கோல்வளைநாயகி உடனுறை ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவர சுவாமி திருக்கோயில், 10—1—77ல் திருவையாறு ஸ்ரீ தர்மசம்வர்த்தனியம்மை உடனுறை ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

முசுகுந்தார்ச்சனை

30—12—76 அன்று திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ புற்றிடங்கொண்டநாதரையும் ஸ்ரீ தியாகராஜப்பெருமானையும் சித்தீச்சரம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும் வழிபாடாற்றினார்கள். அன்று ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை செய்வித்து

வழிபாடாற்றியும், தருமையாதீனம் திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தியாகராஜ பெருமானுக்கு முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை செய்வித்து வழிபாடாற்றியும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்குத் திருவருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

பிற திருக்கோயில்களில்

27—12—76 ல் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ அபயாம்பிகை உடனுறை ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயில், 9—1—77 ல் திருவிடை மருதூர் ஸ்ரீ மகாலிங்கேசுவர சுவாமி திருக்கோயில், சூரியனார் கோயில் திருக்கோயில், 28—12—76 ல் திருப்புன்கூர் ஸ்ரீ சிவ லோகநாத சுவாமி திருக்கோயில் 10—1—77 ல் திருவலஞ்சுழி ஸ்ரீ பெரியநாயகி உடனுறை ஸ்ரீ கற்பகநாதேசுர சுவாமி திருக் கோயில், சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதசுவாமி திருக்கோயில் ஆலங்குடி ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி திருக்கோயில் ஆகிய திருக் கோயில்களுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

சிதம்பரம் வழிபாடு

1—1—77 அன்று புத்தாண்டுப்பிறப்பு நாளாதலின் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பின்னர் 5—1—77 அன்றும் திருவாதிரை தரிசனத்திற்கு எழுந்தருளி தில்லைக் காளியம்மனை வழிபட்டு ஆயிரக்கால்மண்டபத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு லட்டுபாவாடை நிவேதனம் செய்துவழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். அன்று சிதம்பரம் தருமையாதீன ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை, திரு. பொன்னம்பலம் பிள்ளை, திரு. R. கனகசபைப்பிள்ளை. திரு. திருநாவுக்கரசுபிள்ளை திரு. G. வாகீசம்பிள்ளை முதலிய சிதம்பரம் நகரப்பெருமக்களும் பக்தர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். அங்கு தில்லைத் திருமுறைமன்ற அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்க ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பஞ்சாக்ஷரம்பற்றி விளக்கவுரை செய்து அருளாசிவழங்கினார்கள். சிதம்பரம் திரு. R. கனகசபைப் பிள்ளை அவர்கள் வரவேற்புரை கூறி அனைவரையும் வரவேற் றார்கள். டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்கள். சிதம்பரம் நகரப்பெருமக்கள் பலர் வந்து ஆசியுரையைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

வேளூரில்
திருவிளக்கு அறக்கட்டளைத் தொடக்க விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான புள்ளிருக்குவேளூர் புகழ்பெற்ற பிரார்த்தனைத் தலங்களில் ஒன்று. இத்தலத்தில் நாள்தோறும் திருவிளக்கேற்றி இறைவன்திருவருள் நலம்பெறு தற்கு வாய்ப்பாகத் திருவிளக்கீடு அறக்கட்டளை ஒன்று தொடங் கப்பெற்றுள்ளது.

29—1—77 சனிக்கிழமை தைமாதக் கார்த்திகையன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை களும் அர்ச்சனையும் நிறைவு பெற்றவுடன் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் திருவிளக்கு அறக் கட்டளைத் திட்டத்தைத் தொடங்கிவைத்து, அன்பர்கள் பலரும் இத்திட்டத் தில் ஈடுபட்டு இறையருள் பெறுமாறு அருளாசி வழங்கினார்கள். விளக்கீடு அறக்கட்டளைக்கு, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அறக்கட்டளைச் சார்பில் முதன்முதலாக ரூ. 1001 வழங்கி இத் திட்டத்தைத் தொடங்கிவைத்தருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானக் கட்டளைவிசாரணை வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளும், மற்றும் அன்பர்கள் பலரும் இவ்வறக்கட்டளைத் திட்டத்திற்குத் தங்கள் காணிக்கைகளைச் செலுத்திப் பங்கு கொண்டார்கள்.

குறிப்பு:- இந்நல்லறப்பணியில்பங்குகொள்ள விரும்புவோர், மாயூரம் இந்தியன் வங்கியின் எல்லாக் கிளைகளிலும் கமிஷன் இன்றி காணிக்கைகளைச் செலுத்தலாம். காணிக்கைத்தொகை திருவிளக்கு அறக்கட்டளை நிதியில் நிலையான முதலீடாகச் சேர்க்கப்பெறும். ரூ.1000த்தை செலுத்த இயலாதவர்களுக்காக ஸ்ரீ வைத்தியநாதசுவாமி சந்நிதியில் தனி உண்டியல் வைக்கப் பெற்றிருக்கிறது. பக்தர்கள், திருவிளக்கு அறக்கட்டளைக்காகத் தங்கள் காணிக்கைகளை அதில் செலுத்தலாம்.

தமிழக ஆளுனரின் ஆலோசகர்
திரு. R. V. சுப்பிரமணியம் அவர்கள் வேளூர் வருகை.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு, தமிழக ஆளுநர் மாண்புமிகு. திரு. சுகாதியா அவர்களின் ஆலோசகர் திரு. R. V. சுப்பிரமணியம் அவர்கள் 1—2—77 செவ்வாய்க்கிழமை வருகை புரிந்தார்கள். ஆதீன மேற்பார்வை யாளர்களும், தேவஸ்தானக் கண்காணிப்பாளர், சிவாசாரியார்

முதலியவர்களும் பூர்ணகும்பம்முதலிய கோயில்மரியாதைகளுடன் வரவேற்ருர்கள். ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான், ஸ்ரீ தையல் நாயகி, ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி சந்நிதிகளில் வழிபாடு செய்விக்கப் பெற்றது.

செவ்வாய்க்கிழமைமுருகனுக்குஉகந்தநாள். தைச்செவ்வாய்த் திருவிழா நாட்களில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு ஒவ்வொருநாளும்ஒவ்வொருவகையான நிறமுள்ளமலர்களால் அலங்காரம் செய்வது இங்குச் சிறப்பு நிகழ்ச்சி. அன்று செந்நிற மலர்களால்அலங்காரம்செய்யப்பெற்றிருந்தது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. திரு. R. V. சுப்பிரமணியம் அவர்கள் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதியில்மனமுருகி வழிபட்டுநின்ருர்கள். 'திருக்கோயில் தூய்மையும் பொலிவும் பெற்று விளங்குகிறது; மீண்டும் வந்து தரிசிக்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றது' என்று கூறிச்சென்ருர்கள். அன்று அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியின் திருவருளுக்கு உரியவராஞர்கள்.

ஜன்ம நட்சத்திர வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் 4—2—77 வெள்ளிக்கிழமை காலையில் கஞ்சனூர் அருள்மிகு கற்பகநாயகி உடனுகிய அருள்மிகு அக்கினிசுவரர் திருக்கோயிலிலும் மாலையில்திருப்பந்தணை நல்லூர் அருள்மிகு காம்பன்னதோளியம்மை உடனுகிய அருள்மிகு பசுபதீசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புவழிபாடு நடைபெற்றது. 'திருப்பந்தணை நல்லூர் திருக்கஞ்சனூர்த் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. அன்று ஆதீன அடியவர்களும் பல்கலைக் கல்லூரி ஆசிரியர், மாணவர்களும், உழவாரப்பணி - துப்புரவுப் பணி செய்தனர், மாலையில் திருப்பந்தணை நல்லூர் வழிபாட்டின் போது ஆதீனக் கல்லூரி மாணவர்களாலும் கல்லூரி முதல்வர் திரு. வி. சா, குருசாமிதேசிகர் M.A., அவர்களாலும் பேராசிரியர் திரு. மு. சிவச்சந்திரன் B. A. அவர்களாலும் சமய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. பலரும் கேட்டுப் பயன்பெற்றனர். இரு ஆலயங்களிலும் உள்ள நிர்வாகிகள் குழுவினரை வரவேற்று வழிபாடு, சமயப்பிரசாரம் முதலியவற்றை உடனிருந்து சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

தைச் செவ்வாய்த் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் தைச் செவ்வாய்த் திருவிழா 30—1—77 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 8—2—77 செவ்வாய்க்கிழமை முடிய உள்ள பத்து நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. பூமிகாரகன் (பூமிக்கு உரியவன்) எனப்படும் செவ்வாய்க்கு (அங்காரகன்) உரிய தலம் புள்ளிருக்கு வேளூர். செவ்வாய்க்கு உரிய ராசி மகரராசி. இம்மகரராசிக்கு உரியமாதம் தைமாதமாகும். மகரராசியில் சூரியன் பிரவேசிக்கும் மாதம் தை ஆதலால் இது செவ்வாய்க்குரிய மாதமாகிறது. அங்காரகனுக்குரிய இத்தைமாதத்தில், அங்காரகனை வழிபடுவதும், அங்காரகனுக்கு அதிதெய்வமாக உள்ள முருகப்பெருமானை வழிபடுவதும் மக்களுக்கு நலம் பல விளைக்கும் என்பதனால் தைச் செவ்வாய்த் திருவிழா இங்கு ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பூமிக்குஉரிய அங்காரகனையும், அதிதேவதையாகிய முருகனையும் தைச்செவ்வாயில் வழிபட்டால் நிலவருவாய் பெருகுவதோடு நமக்கும் நாட்டிற்கும் நலம் பல விளையும். இவ் விழா வேளூரில்மட்டுமே நடைபெறும் விழாவாகும். ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்கு 30—1—77 அன்று கொடியேற்றமும் 3—2—77 அன்று சகோபுரத்தில் மயில்வாகனக் காட்சியும் 7-2-77 அன்று திருத்தேர்த் திருவிழாவும் 8—2—77 அன்று குமரகுருபரரால் சிறப்பித்துப் பேசப்படும் சித்தாமிர்த தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றன. சுவாமி எழுந்தருளிவரும் பொழுது சிறந்த நாதஸ்வர இன்னிசை முதலியன நடைபெற்றன. விழா நாட்களில் முருகப்பெருமான் அருள் நூல்கள் பற்றிய விரிவுரைகள் அறிஞர்களால் நிகழ்த்தப்பெற்றன.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அன்பர்கள் உபயமாக இவ் விழா நடைபெற்றது, 8—2—77 தைமாதக் கடைச்செவ்வாயன்று, தருமையாதீன இசைப் புலவர், சீகாழி, திரு. S. கோவிந்தராசன் அவர்கள் உபயம். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்று எழுந்தருளி வழிபாடாற்றி, குடும்பத்தோடு வந்திருந்த சீகாழி கோவிந்தராசன் அவர்களுக்குப் பிரசாதங்கள் நல்கி ஆசி அருளினார்கள். சீகாழி கோவிந்தராசன் அவர்களும், அவர்தம் குமாரரும் கந்தரலங்காரம் முதலிய முருகன் புகழ்ப் பாடல்களை உள்ளமுருக ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப்பெருமான் சந்நிதியில் பாடி வழிபட்டனர். முருக பக்தர்கள் நாள்தோறும் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமியின் திருஉலாக் காட்சியைத் தரிசித்தும், விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

சீகாழி வெள்ளைமாளிகையில் பெரியபுராண விரிவுரை

சீகாழி பெருநிலக்கிழார், திரு. K. அருணாசல முதலியார் அவர்கள், சீகாழி நகர அன்பர்கள் கேட்டுப் பயன்பெறுமாறு பெரியபுராண விரிவுரை, தொடர்ந்து நிகழ ஏற்பாடு செய்துள்ளார்கள். இவ்விரிவுரைத் தொடக்க விழா 5—2—77 சனிக்கிழமை அன்று சீகாழி வெள்ளைமாளிகையில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்கத்தில் தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி படிக்கப்பெற்றது. பெரியபுராண விரிவுரையைத் தொடங்கிவைத்து திரு. இரா. இராசசேகரன் பி எஸ்சி., பி.எல்., அவர்கள் பெரியபுராணத்தின் சிறப்பையும், சைவர்கள் அதைப் போற்றவேண்டியதன் கடமையையும் வற்புறுத்திக்கூறி உரையாற்றினார்கள். தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ., அவர்கள் பெரியபுராணவிரிவுரையைத் தொடங்கி முதற்பாடலுக்கு விளக்கம் கூறினார்கள். தொடக்கத்திலும் நிறைவிலும் சீகாழிதேவஸ்தானஓதுவார் திரு. சு. திருஞானசம்பந்தன் அவர்களால் திருமுறை ஓதப்பெற்றது. தில்லைத் திருமுறைமன்ற அன்பர்களும். உள்ளூர்ப் பெருமக்களும், சைவ நல்லன்பர்களும் வந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

சென்னை, தருமையாதீன சமயப் பிரசாரநிலையத்தில் வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 2—1—77, 30—1—77 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 7-மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்கத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியின் திருவுருவப் படத்திற்கு வழிபாடு நிகழ்த்தப் பெற்றது. நிலைய ஓதுவார் திரு. எஸ். ஞானப்பிரகாசம் வேளூர் திருப்பதிகங்களை இன்னிசையுடன் பாராயணம் செய்தார்கள். 2—1—77 அன்று நிகழ்ந்த விழாவில் சென்னை தேவி நிலையம் திருமதி G. K பொன்னம்மாள் சகோதரிகள் குழுவினரால் முருக பக்திப் பாடல்கள் பாடப்பெற்றன. தொடர்ந்து பூவை திரு. வாசுதேவ முதலியார் அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்று வேளூர் கிருத்திகை விழாப் பற்றியும் அவ்விழாப் பிரசாதம் இங்கு வழங்கப்பெறுவது பற்றியும் விளக்கி இவ்விழாவில் கலந்து கொள்ளும் பேறு நம்புண்ணிய வசத்தால் கிடைத்தது என்று கூறி இவ் விழாவை ஏற்படுத்தி அருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டார்கள். அடுத்து திரு. ஆர். சிவஞானம் செட்டியார் அவர்கள் திருமதி பொன்னம்மாள் குழுவினரின் இன்னிசையைப் பாராட்டிக் கூறினார்கள்.

30—1—77 அன்று நிகழ்த்த விழாவுக்கு சென்னை அறநிலையத் துறை டெப்டி செகரட்டரி திரு. R. இராஜகோபால் அவர்கள் தலைமையேற்றார்கள். திரு. B. J. மாதவன் முருக பக்திப் பாடல் களைப்பாடி அனைவரையும் முருக பக்தியில் திளைக்கச்செய்தார்கள். பிரசார நிலையம் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வேளூரில் தொடங்கப்பெற்றிருக்கும் திருவிளக்கு அறக்கட்டளை பற்றி விளக்கம் கூறி அதில் ரூ. 1000 செலுத்தி பங்குகொள்ளு மாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார்கள். புலவர் திரு. K. ஆறுமுகம் அவர்கள் அறக்கட்டளைபற்றிய அறிக்கையைவாசித்து இவ் அறக்கட்டளையில் அனைவரும் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்கள். விழாத் தலைவர் தமது தலைமையுரையில் "மடாலயங்கள், தேவாலயங்கள் நில வருவாயை மட்டும் நம்பியிருக்கின்றன. நில வருவாய் கிடைக்காததால் கோயில்கள் வழிபாடு முதலியன நன்கு நடைபெற இயலாத நிலையில் இருக்கின்றன. உண்டியல் வருமானத்தைக்கொண்டு கோயில் நிர்வாகம் நடக்கவேண்டியிருக்கிறது. வருங்காலம் இன்னும் மோசமாகப் போகக்கூடும். கோயில்கள் நல்லமுறையில் நடக்க எல்லாவற்றையும்செய்யும்பொருட்டு அனைவர்க்கும்நல்லமனதைக் கொடுக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்தார்கள். ஆங்கீரச ஸ்ரீ S. வேங்கடேச சர்மா அவர்களால் வெளியிடப் பெற்ற "புள்ளிருக்குவேளூர் தலமகிமையும் தோத்திரப் பாடல் களும்" என்ற நூலை எல்லோருக்கும் இலவசமாக விநியோகம் செய்தார்கள். திரு. P. V. வேங்கடேசுவரன் அவர்கள் வேளூர் தலமகிமையும் தோத்திரப் பாடல்களும் என்ற நூல் வெளியீடு பற்றி பாராட்டிக் கூறினார்கள். பின்னர் திரு. வேங்கடேசசர்மா அவர்களுக்கு சால்வை போர்த்தப்பெற்றது. பிரசார நிலைய வித்துவான். ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தொடக்கவுரை நன்றியுரை முதலியன கூறி விழாவை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

சோவியத் ரஷ்யாவில் சமய நிலை

ரஷ்ய சோஷலிச சோவியத் யூனியன் நாட்டில் சமயங்கள் அவரவர் விருப்பத்தின்படி கைக்கொள்ளலாம். அவரவர் சமயத்தை அவரவர் பிரசாரம் செய்யலாம். ஆனால் எவருக்கும் விருப்பமில்லாத நிலையில் மதமாற்ற முயற்சிகள் செய்தல் தடை செய்யப்படுகிறது. அரசு மதச்சார்பில்லாதது. ஆனால் தனிப் பட்டோர் விருப்பத்தைத் தடை செய்யவில்லை.

அந்நாட்டில் கிறிஸ்தவம், பௌத்தம் மகம்மதிய மதங்களுக்கு உரிய தொழுகை இடங்களும் மதத் தலைவர்களும் உள்ளார்கள்.

(தொடர்ச்சி 146 ஆம் பக்கம் பார்க்க)

உ

சிவமயம்

திருவாமூர், அருள்மிகு. பசுபதீசுவரர் திருக்கோயில்

அருள்மிகு. அப்பர் ஆலயம்

இராஜகோபுரம், அப்பர் அறவுரை மண்டபம்

திருப்பணி வேண்டுகோள்.

தொண்டுநெறி துலக்கிய தூயோர் :

செந்தமிழும், சிவநெறியும் விளங்கத் திருவவதாரம் செய்த திருநாவுக்கரசு நாயனார், சைவ - சமயாசாரியருள் இரண்டாமவராகப் போற்றப்பெறும் சிறப்பினர். இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்குமுன் சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினால், தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமூரில் அப்பர் பெருமான் அவதரித்தார். சைவக்குலத்திற் பிறந்து சமணம் சார்ந்து திருவருளால் மீண்டும் சைவஞ்சார்ந்து மன்னனையும், மக்களையும் சைவத்திற்கு மாற்றித் தமிழகமெலாம்சென்று, தேனினும் இனிய தேவாரத் திருப்பாடல்களை அருளி, தொண்டுநெறி துலக்கிய அப்பர் பெருமான் அருள் வரலாறு, தமிழ்ச், சமய, மொழி, பண்பாட்டு வரலாறுகளில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது.

ஆலயம் வளர்ந்த அருள் வரலாறு :

திருவாமூரில் அப்பர் பெருமான் அவதரித்த இடத்தில் இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர்த் திருப்பணி தொடங்கி அறநிலையத்துறையினர் ஒத்துழைப்போடு, ஆதீனத் திருமடங்கள், சைவ நல்லன்பர்கள் மற்றும் பொதுமக்கள் உதவியால், விமானம், முன்மண்டபம் இவற்றொடு அப்பருக்கோர் ஆலயம் எழுப்பப்பெற்று 1963 இல் சிறப்பாகக் குடமுழுக்கு விழா நிகழ்ந்தேறியது. பின்னர், அன்பர்கள் உதவியால் திருக்கோயிலைச்சார்ந்த பகுதியில், திருநாவுக்கரசுநாயனாரின் தந்தை, தாயார் திருப்பெயரால் புகழனார் நூல்நிலையம் ஒன்றும், மாதினியார் சிவபூஜை நிலையம் ஒன்றும் அமைக்கப்பெற்றன. நந்தவனம், கிணறு முதலியனவும் அமைக்கப்பெற்று நித்திய நைமித்திக பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

" சிவபூஜை நிலையத்திற்குத் தென்பால் சுமார் 80 x 20 அடியில் அன்பர்கள் பலரது பொருள் உதவி மற்றும் கட்டுமான உதவிகளால் மாகேஸ்வரபூஜை நிலையம் ஒன்று கட்டபெற்று நிறைவேறும் நிலையில் உள்ளது அப்பர்பெருமானைச் சைவத்திற்கு மீட்டுத்தந்த அவர் தமக்கையார் திலகவதியார் பெயரில் "திலகவதியார் தவநிலையமும்" கட்டித் திருப்பணி செய்ய உள்ளது.

நித்திய பூஜைக்கு நிலக் கொடை :

திருவாமூர் அப்பர் பெருமான் ஆலயத்திற்குத் திருவாமூர் திரு. ஆர். நாராயணரெட்டியார், ஏரிப்பாளையம் திரு. நாராயண பிள்ளை, சேமக்கோட்டை திரு. S. B. பட்டாபிரெட்டியார், வீரப் பெருமாநல்லூர் திரு. B. A. இராமமூர்த்திரெட்டியார், திருவாமூர் அப்பர் ஆலயக் கும்பாபிடேகக் குழுவினர், திருவாமூர் அன்பர்கள் கொடூர் திருமதி. லட்சுமி அம்மாள் மற்றும் பலரது நன்கொடை யால் கிடைத்த சுமார் 12 ஏக்கருக்கு மேல் நஞ்சை – புஞ்சை நிலங்கள் உள்ளன.

நித்திய வழிபாடுகளோடு, அப்பர் பெருமான் இறையடி நீழலில் இணைந்த சதயத்திருநாளில் திங்கள்தோறும், அன்பர் கள் பலரது உபயமாக ரூபாய் 250 திட்டத்தில் மாதச் சதய விழா, விசேட அபிடேக ஆராதனை மாகேசுவரபூஜை ஆகியவற் றுடன் நடைபெற்று வருகின்றது. தருமை ஆதீனத்தைச் சார்ந்த திருவாமூர் அப்பர் தேவாரப் பாடசாலையின் சார்பில் மாதச் சதயம்தோறும் தக்க தமிழறிஞர்களால், அப்பர் தேவார விரிவுரைகள் நிகழ்த்தப்பெறுகின்றன. குருபூஜை விழாக்குழு வினரால் ஆண்டுக் குருபூஜைவிழா, அப்பர்பெருமான் இறை யடியில் இணைந்த சித்திரைச் சதயத்தை ஒட்டி மூன்று நாட் களுக்கு, அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு, பண்ணாராய்ச்சி மாநாடு, சிவபூஜகர் மாநாடு முதலிய அங்கங்களுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.

இராஜகோபுர, மண்டபத் திருப்பணிகள்:

நாளும் வளர்ந்து வரும் திருவாமூர் அப்பர் ஆலயத்தில் சந்நிதிக்கு எதிரில் மூன்று நிலைகளோடு கூடிய இராஜ கோபுரம் ஒன்று அமைக்கவும், அப்பரடிகள் காட்டியருளிய அறநெறிகளை விரித்துரைக்க ' அப்பர் அறவுரை மண்டபம் ' ஒன்று அமைக் கவும் இதுபொழுது தீர்மானிக்கப் பெற்றுள்ளது. இதற்கென அறநிலையத் துறையின் இசைவோடு, திருவாமூர் திரு. ஆர். நாராயணரெட்டியார் அவர்கள் தலைமையில் 21 பேர் கொண்ட திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பெற்றுத் திருப்பணிக்கான கால்கோள் விழா நடைபெற்றுள்ளது. அறநிலையத்துறை ரூபாய் பத்தாயிரம் முன்னதாக வழங்க இசைவளித்திருக்கிறது. இத் திருப்பணிக்கு ரூபாய் 60,000 (ரூபாய் அறுபதாயிரம்) த்துக்கு மேல் ஆகும் எனத் திட்டமிடப்பெற்றுள்ளது.

திருப்பணியில் பங்கேற்றுத் திருவருள் பெறுக :

சைவமும் – தமிழும் தழைத்தினிதோங்கத் திருவவதாரஞ் செய்த அப்பர் பெருமானுக்கு நடைபெற இருக்கும் இத்திருப்

பணியில் பங்கேற்பது சைவ நல்லன்பர்களுக்கும், தமிழ்ப் பெரு மக்களுக்கும் பெருமை தரத்தக்க கடமையாகிறது. இதற்காக நன்கொடைச் சீட்டுக்கள் ரூ. 250, 100, 50, 25, 10, 5 என்ற மதிப்பில் வெளியிடப்பெற்றுள்ளன. அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரியில் நேரிலோ, அஞ்சல் வழியோ தங்கள் நன்கொடைகளைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்வதோடு, இத்திருப்பணி விரைவில் நடைபெற்று, வரும் சித்திரைச் சதய விழாவிற்குள் பூர்த்தியாக ஒத்துழைத்துத் திருவருளும், குருவருளும் பெற்றுச் சிறக்க வேண்டுகின்றோம்.

இன்னணம்,

அப்பர் ஆலயம்
திருவாமூர்.

திருப்பணிக் குழுவினர்.

நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி :-

பொருளாளர்,
திருப்பணிக்குழு, ஸ்ரீ பசுபதீசுவரர், அப்பர் திருக்கோயில்
திருவாமூர் (அஞ்சல்), பண்ணுருட்டி (வழி),
தெ. ஆ. (மாவட்டம்).

(143 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சௌரம் (சூரிய வழிபாடு) சம்பந்தமான ஆலயம் ஒன்றிருப்பதாகவும், அங்கு அந்த வழிபாட்டு முறைப்படி வளர்க்கப்பட்ட அக்னி இன்றும் அதே நிலையில் காப்பாற்றப்பட்டு வருவதாகவும் சூரிய வழிபாடு உடையவர்கள் யாரும் வருவதற்கு வாய்ப்பில்லை என்றும், எனினும் அரசு அந்த அமைப்பைப் பேணிக்காத்து வருகிறதென்றும திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் ரஷ்யா சென்று நேரில் கண்டு எழுதியிருக்கிறார்கள். அங்கு அரசு தலையிட்டால் சமயக் கோட்பாடுகள் அழிக்கப்படவும் இல்லை. காக்கப்படவுமில்லை. சமயப் பற்றுதலுள்ளவர்கள் அவரவர் சமயத்தை அவரவரும் பேணிக்காத்துக்கொள்ளவேண்டியதே என்பது அங்குள்ள நிலை.

25—1—77 (மலர் 21 இதழ் 10) "சோவியத் யூனியன் செய்திகளும் கருத்துக்களும்" என்ற ஏட்டில் ரஷ்ய திருச்சபைத் தலைவர் அவர்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம்செய்யவந்துள்ளார்என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியாவில் மலபார் திருச்சபை உயர் தலைவர் அவர்கள் ரஷ்ய நாட்டிற்குச் சென்று அங்குச் சுற்றுப்பயணம்செய்து இந்தத் தலைவரவர்களை அழைத்ததாகவும் அதனை ஏற்றுவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது, அரசியல் தலைவர்கள் ஒருநாட்டிலிருந்து மற்றநாட்டுக்கு அழைப்பின்பேரில் போவதுபோலச் சமயத் தலைவர்களையும் அங்கங்குள்ளவர்கள் அழைத்து உபசரிப்பதாகும்.

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(நளஹூ மாசிமீ 1உ முதல் 30உ முடிய)

(12—2—1977 முதல் 13—3—1977 முடிய)

ஸ்ரீ நளஹூ மாசி மாதம் 1உ ஸ்திரவாரம் அனுஷ நக்ஷத்திரம் கரசை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 17 நாழிகை 11 விஞடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் மகர ராசியிலிருந்து கும்ப ராசியில் சங்கிரமணமாக மாசிமாதப் பிரவேசம் செய்தருளுகிருர். அதன்பலன் உலகெங்கும் ஸஸ்ய தானியங்களின் விளைவு மிகுந்து பிரஜைகள் அன்ன ஆகார வசதியுடன் ஜீவனம் செய்து வருவார்கள். தேசங்களில் அத்தியாவசிய பண்டங்களாகிய மிளகாய், தனியா, புளி, எண்ணெய் இவற்றின் விலைவாசி மாத முதலில் கூடுதலாகவும் பிற்பகுதியில் மலிந்தும் இருக்கும். பருத்தி, ஐவுளி, கோதுமை, கடலை இவற்றின் விலை குறைந்து வரும். துவரை, பாசிப்பயிறு விலை அதிகமாகும். உலக நாடுகளில் எங்கும் பரஸ்பர நிலைமையும் பிரஜாசம்ரக்ஷணாதி தர்மங்களும் ஏற்பட்டு சுபிட்சம் ஏற்படும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உள்ள குருமகான்கள் அருளிவருகின்ற புனித வழியில் தேவாலயங்களில் தினமும் தெய்வ ஆராதனைகள் நடைபெற்று வரும். ஈஸ்வர கடாக்ஷத்திஞல் ஜனப்பிரதிநிதிகள் ஜஞதிபதிகள் துலாக்கோலுக்கு ஒப்பாக தேசபரிபாலனம் நடத்திவர முற்படுவர். பிரஜைகள் குருபக்தி, தெய்வபக்தி, தேசபக்தியுடையவர்களாக நேர்மை வழியில் பொருளீட்டி க்ஷேமகரமாக வாழ்ந்து வருவார்கள்.

குறிப்பு :- குருப் பெயர்ச்சி

ஸ்ரீ நளஹூ மாசி மாதம் 7உ (18—2—77) சுக்கிரவாரம் சதய நக்ஷத்திரத்தில் சூரிய உதயம் முதல் 30 நாழிகை 20 விஞடிக்கு சிம்ம லக்கினத்தில் ஸ்ரீ குருபகவான் மேஷராசியிலிருந்து தனது நட்பு க்ஷேத்திரமாகிய ரிஷபத்தில் பிரவேசிக்கிருர்.

குரு ரிஷபராசியில் சஞ்சரிக்கிற காலம் மேஷம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் இந்தராசிக்காரர்களுக்கு தனத்தையும், சுப கல்யாணாதி விசேஷ பலன்களையும், புத்திர பாக்கியத்தையும் அளிக்கும். மற்றும் உயர்பதவி, உயர்ந்தோர் நேசம், பிரபுத்துவம் ஆகிய மேன்மை ஸ்திதியையும் ஏற்படுத்திவரும்.

ரிஷபம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம், மீனம் இந்த ராசிக்காரர்களுக்கு தனவிரயம், இடர்ப்பாடு, மிருத்து பயம் சத்துருகிலேசம், கிரக வாகன நஷ்டம், தொழில் மாற்றம் ஆகிய சிரம பலன் தோன்றும். திசா புத்தி வலுவுடையோருக்கு பாதிப்பின்றி நன்மையே தரும்.

எல்லா ராசிகளையுடையோரும் அருள்மிகு தக்ஷிணாமூர்த்தி சுவாமிக்கு குருவாரத்தில் அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டு அன்னதானம் செய்துவர சகல சம்பத்தும் ஏற்படும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். தனவிருத்தியும் குடும்பத்தினருக்கு சௌக்கிய பலனும் தரும். வாகனாதி சுக சௌகரியங்களில் திருப்திகரமான நிலைமையாக இருந்துவரும். இராசாங்க பிரபலமும் சகல காரியங்களிலும் ஜெய பிராப்தியும் ஏற்படும். செந்நெல் பாக்கிய விருத்தியை ஏற்படுத்தும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மிடுக்கான போக்கும் புத்தி சாதுரியமும் மிகுந்து செயல்படும். புதன் வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம்½

(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வு. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பத்தில் பணவசதி போஜன சௌகரியம் திருப்திகரமாக இருந்துவரும். புதியவாகன சௌகரியத்தையும் பசு பால்பிராப்தியையும் உண்டுபண்ணும். வித்துவத்துவம், கலை எழுத்துத்துறையில் இராசாங்க கௌரவத்தை ஏற்படுத்தும். புத்திரர்களில் ஒருவருக்கு இராசாங்கத்தில் கௌரவ பட்டமும் ஊதிய உயர்வும் தரும். மனைவிக்கு இரத்த பித்த மயக்கம்கண்டு நீங்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நன்மதிப்பும் முன்னேற்றமும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½– திருவாதிரை–புனர்பூசம் ¾

(கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணம் பெருமளவு வருவதாகத் தோன்றும். பொதுநலக் காரியங்களில் அந்த அளவுக்குச்செலவும் தருமச்செலவுகளும் அவசியமானதாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரர் பந்து அம்மான்களின் மனக்குறை ஏற்பட்டு உடன் சுகமாகும். மாதுரு பிதுருக்களால் எதிர்பாராத சிரமம் தோன்றும். தாரபுத்திரர்களின் சுகம் திருப்தி கரமாக இருந்துவரும். சமூகத்தில் எதிர்பாராத எதிர்ப்புசம்பவம் வந்து நீங்கும். செய்தொழில்களில் புதிய மார்க்கம் அல்லது மாறுதல் ஏற்படச் செய்யும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் சௌகரியங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். பண சௌகரியம் கொடுக்கல் வாங்கல்கள் கண்யத்துடன் இருந்து வரும். சகோதரர்களுக்கு சௌக்கிய பலன் மேலிடும். இம்மாதம் 9௳க்கு மேல்வித்தியா வியாபாராதி கலைத்துறையில் முன்னேற்றம் ஏற்படச் செய்யும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர் களிடையே மனோவேக போக்கு வந்து உடன் சுமுகமாகும். செய் தொழில்களில் அதிருப்தியாக இருப்பினும் கிரியாஸ்தானாதிபதி குருவீட்சணம் பெறுவதால் எல்லாக் காரியங்களும் சுமுகமாக நிறைவேறிவரும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மாத முற்பகுதியில் சகல துறை யிலும் நற்பலனாகவும் பிற் பகுதியில் சாதாரண பலனாகவும் நடக்கும். தன லாபம் விருத்திகரமாக இருந்துவரும். சகோதர சகோதரிகளின் நலம் மேலாக இருந்துவரும். பூமி இயந்திர சாதனங்களில் நற்பலனேற்படும். புத்திரர்களின் தொழில் துறைகளில் சாதாரண பலனாக இருந்துவரும். வியாஜ்ஜிய விவகாரங்களில் சற்று மனோ விசாரம் ஏற்படினும் ஜெயபிராப்தி யாகும். மனைவிக்கு உஷ்ணாதிக்க நலிவு ஏற்பட்டுக் குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறப்புடன் நடந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபி விருத்தியில் திருப்திகரமான நிலைமை ஏற்படும். சமயோசிதமாகப் பலவழியில் வருமானங்கள் வரும். பூமி இயந்திர வகையில் நற்பலன் ஏற்படும். வித்துவத்துவம் கலை எழுத்துத் துறையில் 9உ க்குமேல் நற்கியாதியும் உத்தியோகத்தில் உயர் பதவியும் ஏற்படும். கோர்ட் வழக்குகளில் இம்மாதக் கடைசியில் ஜெய பிராப்தியாகும். தார புத்திரர்கள் சௌக்கியமாகஇருந்து வருவார்கள். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. தூ. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். தன வருவாய் சீராக இருப்பினும் கண்யமான நிலைமையிலேயே குடும்ப பிரச்சினைகளைச் சமாளித்தலாகும். சகோதரர்களிடம் அதிருப்தியும் ஒற்றுமையும் கலந்துகாணும். மனைவிக்கு இரத்தக் கொதிப்பு மயக்கம் போன்ற நலிவு வந்து குணமாகும். பூமி இயந்திர வகையில் சாதாரணபலனுக இருந்துவரும். புத்திரருக்கு நரம்புத் தளர்ச்சி, சிரோரோகம் வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். செய் தொழிலில் மந்தநிலைமையாக இருப்பினும் முடிவில் அனுகூல பலன் தரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். தனசௌகரியம் மேலாக இருந்துவரும். குடும்ப நலம் பெருகும். சகோதரர்கள் ஒற்றுமையாகவும் விசுவாசமாகவும் இருந்துவருவார்கள். வித்துவத்துவம் கலை எழுத்துத் துறையில் விசேஷ பலன்களைக் கொடுக்கும். பூமி இயந்திர சாதனங்களில் ஆதாயம் தரும். பெண் மகவு ஒன்று ஏற்படும். தாம்பத்திய வாழ்வு சுமுகமாக நடந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அரசாங்கவிருது பெறும் வாய்ப்புக்கள் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே.)

தனுசு ராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். மாத முதலில் பண வரவுகளும் பிரபலஸ்தர்களுடைய அனுசரணையும்

திருப்தியளிப்பதாக இருந்துவரும். 9உ க்குமேல் சில அசம்பா வித செயல்களால் மனசங்கடமும் பொருள் விரயமும் ஏற்படும். சகோதரம் பந்து அம்மான்களிடையே மனவருத்தம் வந்து பின் சுமூகமாகும். வாகன சௌகரியம் பசுபால் பிராப்தி நல்லநிலை மையில் இருந்துவரும். புத்திரர் நலம் சாதாரணமாக இருந்து வரும். மனைவிக்கு சிரோபாதை நரம்புத்தளர்ச்சி போன்ற நலிவு வந்து வைத்தியத்தால் குணமாகும். செய் தொழில் களில் மதிப்பும் ஆதரவு பலமும் இருந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

10. மகரம் – உத்திராடம்¾ – திருவோணம் – அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத்தரும். குடும்பத் தில் தன வரவு சீராக இருந்துவரும். 9உ க்குமேல் எல்லா பிரச்சினைகளிலும் குழப்பம் நீங்கி நல்வழியை ஏற்படுத்தும். சகோதரர் புத்திரர் புத்திரிகளின் சௌக்கியம் மேன்மை ஸ்திதி யில் இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் ஓர் மனக்குறை இருந்துவரும். சிவ சகஸ்ரநாம அருச்சனை செய்து சுவர்ண தானம் செய்வதால் நலம் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைப்பணி நடந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾

(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த.)

கும்பராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் மேன்மேலும் திருப்திகரமான நிலைமையை ஏற் படுத்திக் கொண்டிருக்கும். பண ஆதாயங்கள் ஏற்பட்டுக் குடும்ப பிரச்சினைகளில் எல்லா சம்பிரதாயங்களும் நடந்து கொண் டிருக்கும். கண் எரிச்சல் சிரோபாதை போன்ற உஷ்ண பீடிதம் ஏற்பட்டு சௌகரியம் ஆகும். பசு பால் பிராப்தியில் குறை வின்றியும் பூமி பூர்வீகப் பொருள்களில் ஓரளவு பலனும் இருந்து வரும். தார புத்திரர்களின் சௌகரியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் மதிப்புடன் நடந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருவாய் வேண்டிய அளவுக்கு வந்துகொண்டிருக்கும். அடிக் கடி அவசியமான செலவுகளும் ஏற்படும். இளைய சகோதரர்

களால் நன்மை இருந்துவரும். பூமி இயந்திர சாதனங்களின் முயற்சியில் ஆதாயம் வந்துசேரும். பிதுரார்ஜித சொத்துக்களில் வாத பிரச்சினைகள் நேரும். மாதுரு மூலம் சிறு உதவிகள் கிடைக்கும். மனைவிக்கு சிரோரோகம் போன்ற நலிவு வந்து குணமாகும். செய்தொழில்களில் கடும்முயற்சியில் காரியசாதகம் ஏற்படும். ஏவலர் பணியாளர்களின் உழைப்பு ஸ்லாக்கியமாவதாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

சிறுவர்களுக்கு:

உங்கள் திறமைக்கோர் சோதனை !

(வி. சா. கு.)

ஊர்க்குருவிக் கணக்கு :

காவிரிக் கரையில் ஒரு ஆலமரம். அம் மரக் கிளையில் ஒரு ஊர்க்குருவி அமர்ந்திருந்தது. மரத்தின்மேலே வானவெளியில் சில குருவிகள் கூட்டமாய்ப் பறந்து சென்றன. ஊர்க்குருவி அவற்றைப் பார்த்துக் களிப்போடு 'வானவெளியில் பறந்து செல்லும் நூறு குருவிகளே ! நூறு குருவிகளே ! எங்கே போகிறீர்கள் ?' என்று கேட்டது. அக்குருவிகள் ஊர்க் குருவியைப் பார்த்து நாங்கள் மாத்திரம் நூறு குருவிகளல்ல. நாங்களும் எங்கள் இனமும், எங்கள் இனத்தில் பாதியும் பாதியிற் பாதியும் நீயும் சேர்ந்தால் நூறு குருவிகளாவோம் என்று கூறின. வான வெளியில் பறந்து சென்ற குருவிகள் எத்தனை ?

சிறுவர்களுக்கு:

சென்ற இதழ்க் கணக்கின் விடை

(மலர் 36 இதழ் 2 பக்கம் 64 a)

59 வது நாளில் முள்ளம்பன்றியை நாய் பிடிக்கும்.

முள்ளம்பன்றி ஓடியதூரம் 59×30 1770 கி. மீ.

நாய் ஓடிய தூரம் $1+2+3+4...+59=59\times\frac{60}{2}=1770$ கி. மீ.